

a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

நவம்பர் 2012 November | இதழ் 262 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION



16



17



18



உங்கள் இருப்புக்குள் ஈழவிடுதலைத் தீ!
தீயவை எவையும் தீண்டா!
எவனும் வருவானோ
கார்த்திகை விழிநீருக்கு விலைபேச!

22 வது ஆண்டு
nd Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# சூடேறும் அரசியல்

“கனடிய அரசியல் பல மட்டங்களிலும் மாற்றத்தை வேண்டி நகருகின்றது. பல அதிரடி நடவடிக்கைகள் திடுதிப்பென அங்குமிங்குமாக இடம்பெறுகின்றன” என்று கடந்த மாதம் இப்பகுதியை ஆரம்பித்த அதே முதலாவது பந்தியுடன், இந்த மாதத்தின் தலையங்கத்தையும் ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

கனடிய மற்றும் ஒன்ராறியோ லிபரல் கட்சிகளைச் சுற்றியதாகவே அரசியல் செய்திகள் வலம் வருவதையும், அவ்வப்போது சூடேறுவதையும் அவதானிக்க முடிகின்றது.

மத்திய லிபரல் கட்சித் தலைமைப் பதவிக்கான களத்தில் ஜஸ்ரின் ரூடோ குதித்துள்ளர். குற்றுயிருடனுள்ள லிபரலுக்கு பிராணவாயு கொடுப்பதற்கு வாரிசு அரசியல் வரவு தவிர்க்க முடியாதது போலும்!

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் இவரது குறி என். டி. பியைத் தள்ளிவிட்டு எதிர்க்கட்சித் தலைவராவதா? அல்லது பிரதமர் கதிரைக்கானதா என்பதை இப்போது கூறமுடியாது.

ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரியின் பதவி துறப்பை அவரது உள்வீட்டு அமைச்சர்களே அறிந்திருக்கவில்லை. முதலில் அதிர்ச்சிக்குள்ளானவர்கள் அவர்கள்தான். புதிய தலைவர் தெரிவுக்குள் நுழைவதற்கு எவரும் தயாராக இருக்காமையே முக்கிய காரணம்.

மாநகர அலுவல்கள் அமைச்சர் கத்லீன் வைன் உட்பட அமைச்சர்கள் எரிக் ஹொஸ்கின், கிளென் முரே, சார்ள்ஸ் சூசா மற்றும் மாகாண சபை உறுப்பினர்களாகவில்லாத ஜெராட் கென்னடி, ஜோர்ஜ் சிமிதர்மன் ஆகியோரது பெயர்களும் தலைமைப் போட்டிக்கு அடிபடுகின்றன.

2013 ஜனவரி 23-27ம் திகதிகளுக்குள் புதிய தலைவர் தெரிவாவார். இந்த மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரபூர்வமாக பெயர்கள் அறிவிக்கப்படுவதுடன், கட்சிக்கான புதிய உறுப்பினர்கள் சேகரிப்பும் முடிவடைய வேண்டும்.

ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபை அமர்வு மூன்று மாதங்களுக்குப் பின்னர்- எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி புதிய முதலமைச்சரால் கூட்டப்படலாம். மார்ச் இறுதியில் சிம்மாசனப் பிரசங்கமும், புதிய வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பும் இடம்பெறலாம். இதன் வாக்கெடுப்பில் அரசு தோல்வி அடையுமானால், அடுத்த மே மாத இறுதிப்பகுதியில் - மே 23ம் திகதி தேர்தல் நடைபெறலாம்.

புதிய தேர்தலின்போது தமது தலைமையில் லிபரல் தோல்வியடையக் கூடாது என்பதில் டால்ரன் மக்கன்ரி கவனமாகவிருந்து காய்களை நகர்த்தியுள்ளார். முன்னாள் பிரதமர் பிறைன் மல்றோனியும் தமது அரசாட்சியின் இறுதி நாட்களில் இவ்வாறுதான் நடந்து, புறொகிறசிவ் கன்சர்வேடிவ் கட்சியை தோல்வியடையச் செய்தார்.

மக்களின் நாடித்துடிப்பு இப்போது லிபரல் பக்கம் இல்லை. புதிய தலைமை வந்தாலும் கட்சியின் ஆயுள் ‘கம்மி’யாகவே இருக்கும். எனவே, 2013 தேர்தல் ஆண்டாக அமையுமென நம்பலாம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 22வது ஆண்டு பூர்த்தி மலருக்கு நவம்பர் 30 வரை படைப்புகள் ஏற்கப்படும்!

கனடியத் தமிழர்களின் அடையாளமாகவும், மூத்த தமிழ் ஊடகமாகவும் மிளிரும் 'தமிழர் தகவல்' இருபத்தியிரண்டாவது ஆண்டு பூர்த்தி மலர் தயாரிப்பு வேலை துரிதமாக இடம்பெறுகின்றது.

கடந்த ஆண்டுகளைப்போல, வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவத்தின் போது மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

சுமார் முப்பதுக்கும் அதிகமான ஆக்கங்கள்இதுவரைஎமக்குக் கிடைத்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

கனடிய நாட்டின் வாழ்க்கை முறைக்குத் தேவையான தகவல்கள், அவற்றின் பின்னணி, முக்கியமான சட்ட மாற்றங்கள், கனடியத் தமிழரின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட இன்னோரன்ன விடயங்கள், புலம்பெயர் வாழ்வின் அனுபவங்கள் போன்றவைகளை மையமாகக் கொண்டு எழுதப்படும் படைப்புகளுக்கு சிறப்புரிமை வழங்கப்படும்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் எழுதலாம். கட்டுரை அல்லது கவிதை வடிவில் இவைகள் அமைந்திருக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின் 416 920 9250 இலக்கத்தில் உங்கள் விபரங்களைப் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

கட்டுரைகள் கிடைக்க வேண்டிய இறுதிநாள் 2012 நவம்பர் 30 வெள்ளிக்கிழமை.

கணினியில் அச்சடிக்கப்பட்ட ஆக்கங்களை tamilsinfo@sympatico.ca என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Tamils' Information
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario.
M4Y 2L4

## நெருக்கடியைச் சந்திக்க திராணியில்லாத ஒன்ராறியோ முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி பதவி துறந்ததுடன் சட்டசபையையும் ஒத்திவைப்பு!

## Dalton McGuinty: Shocking Exit

ஒன்ராறியோ மாகாண முதலமைச்சராக 2003ஆம் அண்டிலிருந்து கடந்த ஒன்பதாண்டுகாளகப் பதவிவகித்த டால்ரன் மக்கன்ரி கடந்த மாதம் 15ஆம் திகதி தமது பதவியைத் திடீரெனத் துறந்து பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர், மூன்றாவது தடவையாக முதலமைச்சரான இவர், சிறுபான்மை அரசாங்கத்தின் தலைவராக எதனையும் சுமுகமாக நிறைவேற்ற முடியாதவராக விளங்கினார். அத்துடன் ஆசிரிய சங்கங்கள், அரசாங்க ஊழியர் சங்கங்களின் சம்பள உயர்வை நிறுத்தும் முயற்சியால் அவர்களைப் பகைத்துக் கொள்ளும் நிலைக்கும் ஆளானார்.

எல்லாவற்றுக்கும் மேலாக மிசிசாகாவிலும் ஓக்வில்லிலும் நிர்மாணிக்கப்படவிருந்த மின்ஆலைகளைத் திடீரென நிறுத்தியதால் மக்களின் வரிப்பணம் பல லட்சம் டாலர்களை விரயமாக்கிய குற்றச்சாட்டில் எதிர்க்கட்சிகளின் கூட்டுப் பிரேரணையொன்றை எதிர்கொள்ளும் சவாலும் இவருக்கிருந்தது.

இவற்றின் காரணமாக, மக்கன்ரியின் லிபரல் கட்சி எந்த வேளையிலும் பதவி கவிழ்க்கப்படலாமென்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் இவைகளைச் சந்திக்கத் திராணியற்றவராகத் தமது முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதுடன் ஒன்ராறியோ மாகாண சட்டசபை அமர்வையும் காலவரையின்றி ஒத்தி வைத்துள்ளார்.

தாம் முதலமைச்சராகவில்லாவிட்டாலும், தமது கட்சி சட்டசபையில் எதிர்க்கட்சிகளின் தாக்குதலுக்குள்ளாக்கப்படக் கூடாதென்பதே சட்ட சபை ஒத்திவைப்புக்குக் காரணமாகும். இதனால், சபை முன்னால் விவாதத்துக்குக் காத்திருந்த பதினொரு சட்ட மூலங்கள் இயற்கை மரணமடைந்துள்ளன.

இவரது பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ள ஒன்ராறியோ மக்கள், சட்டசபை ஒத்திவைத்ததை வன்மையாகக் கண்டித்துள்ளனர். மக்கன்ரி முதலமைச்சராக இல்லாவிட்டாலும், சட்ட சபை கலைக்கப்படும்வரை உறுப்பினராகவிருப்பார்.

1966ல் மாகாண லிபரல் கட்சியின் தலைவராகத் தெரிவான இவர், 2003ல் ஆட்சியைக் கைப்பற்றி முதல்வராகித் தொடர்ந்து மூன்று தேர்தல்களில் வெற்றி பெற்றாராயினும், கடந்தாண்டுத் தேர்தலில் ஒரு எண்ணிக்கை குறைவினால் சிறுபான்மை அரசுக்குத் தலைமை தாங்க நேர்ந்தது. இவரது சகோதரர் கனடிய நாடாளுமன்றத்தில் ஒட்டவா பகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார்.

1991ல் ஒன்ராறியோவில் ஆட்சி நடத்திய என். டி. பியின் முதலமைச்சர் பொப் றே, தொழிற்சங்க நெருக்கடி ஏற்பட்டபோது, 1994 டிசம்பர் 9ல் சட்ட சபையை ஒத்தி வைத்தார். சபையை மீண்டும் கூட்டாமல் 1995 ஏப்ரல் 28ல் மாகாண அரசைக் கலைத்து, புதிய தேர்தலைச் சந்தித்து படுதோல்வி அடைந்ததை அரசியல் நோக்கர்கள் தற்போதைய நிலைமையுடன் ஒப்பீடு செய்கின்றனர்.

மக்கன்ரியின் இடத்துக்குப் புதிய தலைவர் ஒருவர் தெரிவாகி, அவர் முதலமைச்சராகும் வரை மாகாண சபையைக் கூட்ட முடியாத முடக்க நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. புதிய தலைவர் பதவிக்குப் போட்டியிட விரும்பும் அமைச்சர்கள் முதலில் தங்கள் அமைச்சர் பதவியைத் துறக்க வேண்டுமென்று மக்கன்ரி உத்தரவிட்டுள்ளார்.

அடுத்தாண்டு வசந்த காலத்துக்கு முன்னர் புதிய தலைவர் தெரிவு முடிவுற்று, மாகாண அரசு கூட்டப்படுமென்று கூறப்படுகின்றது. உடனடியாகவே அதனை வீழ்த்துவதற்கு இரண்டு எதிர்க்கட்சிகளும் தயாராகி வருகின்றன.

இதற்கிடையில், கனடிய லிபரல் தலைவர் தேர்தலில் ஜஸ்டின் ரூடோவை எதிர்த்துத் தாம் போட்டியிடப் போவதில்லையென்று மக்கன்ரி அறிவித்திருப்பது முக்கியமானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

றொறன்ரோவில் திடீரென எரிபொருளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதப் பிற்பகுதியில் ஒரு லீட்டர் எரிபொருள் (gas) 118.5க்கு விற்பனையானது. இவ்வருட இறுதியில் றொறன்ரோவில் ஒரு லீட்டர் 99 சதமாகக் குறையலாமென எதிர்வு கூறப்படுகின்றது. ஆனால் வின்ட்சர் பிரதேசம் உட்பட கனடாவின் மற்றைய இடங்களில் பத்து வீதமளவுக்கே எரிபொருள் விலை குறையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய மக்களில் பதினைந்து வீதமானவர்கள் தற்போது சுயதொழில்களில் (self employment) ஈடுபட்டிருப்பதாக புள்ளிவிபரமொன்று தெரிவிக்கின்றது. கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் சுமார் ஐந்து லட்சத்துக்கும் அதிகமானவர்கள் புதிதாகச் சுயதொழிலில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். வேலைவாய்ப்புக் குறைவாலும், பொருளாதார தேக்க நிலையாலும் சுயதொழில் முயற்சி விரிவடைகின்றது என சி.ஐ.பி.சியின் அறிக்கை தெரிவிக்கின்றது

தங்களின் வாழ்க்கைத்தரம் குறித்து கனடியர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் திருப்தி கொண்டுள்ளதாக கனடிய புள்ளிவிபரத் திணைக்கள ஆய்வு தெரிவிக்கின்றது. நோவா ஸ்கோஷியா, கியுபெக், நியுபவுண்லாந்து ஆகிய மாகாணங்களில் வசிப்பவர்கள் ஒன்றாறியோ, பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் நுனாவுற் பிரதேசங்களில் வசிப்பவர்களைவிட திருப்தியாக வாழ்வதாக 2003-2011க்குமிடைப்பட்ட கால புள்ளிவிபரம் கூறுகின்றது.

வீடுகளுக்கான அடமானக் கடன்களுக்குப் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள விதிமுறைகள் காரணமாக கனடிய வீடு விற்பனை தேக்கநிலைக்குச் சென்றுள்ளது. முக்கியமாக ஒன்பது நகரப் பகுதிகளில் வீடு விற்பனை குறைந்துள்ளது. மறுபுறத்தில், அடுத்த நான்கு ஆண்டுகளில் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள வீடுகளின் விற்பனை முன்னரிலும் பார்க்க 4.5 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்வு கூறப்படுகின்றது.

ஐந்து மில்லியன் கனடியர்கள் வருடாந்தம் அமெரிக்க விமான நிலையங்கள் ஊடாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வது தெரியவந்துள்ளது. கனடாவிலிருந்து பயணிப்பதைவிட அங்கிருந்து செல்வது சுமார் 30 வீதம் பயணக் கட்டணம் குறைவாகவிருப்பதே இதற்குக் காரணம். கனடியக் கட்டணம் மற்றும் வரிகள் ஆகியவற்றில் குறைப்பு ஏற்படாவிடின் இத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

தங்க நகைக் கொள்ளைகள் றொறன்ரோ பெரும்பகுதியில் அதிகரித்து வருவதால் வெளியில் செல்லும்போது நகைகளை அணிவோர் ஆபத்தை எதிர்கொள்கின்றனர். இதனையிட்டு நகைகள் அணிவோர் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டுமென காவற்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தனிமையில் வெளியில் செல்லும் பெண்கள் தங்கநகைகளைத் தவிர்ப்பது வரவேற்கத்தக்கது என கேட்கப்படுகின்றனர்.

மருத்துவர்களுக்கு மட்டுமென மட்டுப்படுத்தப்பட்டிருந்த சில பணிகளை மருந்தாளர்களுக்கும் (pharmacist) ஒன்றாறியோ அரசு வழங்கியுள்ளது. புளூ தடுப்பு மருந்து ஊசி ஏற்றுதல், புகைத்தலிலிருந்து விடுபட உதவும் மருந்துகளை வழங்குவது, மருத்துவர்களின் மருந்துச் சிட்டைகளை ஆறு மாதங்களுக்குப் பேணி வைத்து மருந்துகளை வழங்குவது போன்ற பணிகளை மருந்தாளர்கள் இனிமேல் செய்ய முடியும்.

கனடிய மக்களின் வருமானத்துடன் ஒப்பிடும்போது அவர்களின் கடன் அதிகளவாக இருப்பதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 2010ஆம் ஆண்டில் வருமானத்தின் 163 வீதமான தொகைக்கு கடன் அதிகரித்துள்ளது. இது முன்னர் ஒருபோதும் இல்லாத அளவென்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சர்வதேச அளவு முறையின்கீழ் நடத்தப்பட்ட ஆய்வு கலந்த புள்ளிவிபரம் கடன் அதிகரிப்பைப் புலப்படுத்தியுள்ளது.

# சனத்தொகை புள்ளிவிபர முக்கிய தகவல்கள்

## றொறன்ரோவில் தமிழ் ஐந்தாவது இடத்தில்

றொறன்ரோ நகரில் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி, உத்தியோகபூர்வ மொழியான ஆங்கிலத்துக்கு அடுத்ததாக புதிய குடிவரவாளர்களின் ஐந்து மொழிகள் முன்னணியில் நிற்கின்றன. தமிழ் மொழி பேசுவோர் இங்கு 5.7 வீதம். கன்ரனிஸ் 8.9 வீதம், பஞ்சாபி 8.0 வீதம், சீனம் 7.0 வீதம், உருது 5.9 வீதமென முதல் நான்கு இடங்களை வகிக்கின்றன. புதிய குடிவரவாளர் மொழிகளில் ஆங்கிலத்துக்கு அடுத்ததாக மொன்றியலில் அரபிக் 17.2, வன்கூவரில் பஞ்சாபி 17.7, கல்கேரியில் பஞ்சாபி 12.3, எட்மன்டனில் டகலொக் 11.8, ஒட்டாவா-கட்டினூவில் அரபிக் 20.4 வீதமென முன்னணியில் உள்ளன.

## முன்னணியிலுள்ள பதினைந்து குடிவரவாளர் வீட்டு மொழிகளில் தமிழும் அடங்குகின்றது

கனடாவில் முன்னணியிலுள்ளதாக பதினைந்து குடிவரவாளரின் வீட்டு மொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பஞ்சாபி, சீனம், கன்ரனிஸ், ஸ்பானிஷ் டகலொக், அரபிக், மன்டரின், இத்தாலியன், உருது, ஜேர்மன், ரஷ்யன், பர்ஷியன், தமிழ், ஹிந்தி, குஜராத்தி என்பனவே இவை. 2006ஆம் ஆண்டு புள்ளிவிபரத்துடன் ஒப்பிடுகையில் தமிழை வீட்டு மொழியாகப் பேசுவோர் தெகை 2011ல் 21.3 வீதத்தால் அதிகரித்துள்ளது. டகலொக், மண்டரின், அரபிக் மொழிகளைப் பேசுவோர் தொகை முறையே 64.1, 50.4, 46.8 வீதமாக அதிகரித்து முதல் மூன்று இடங்களில் உள்ளன.

## றொறன்ரோ பெரும்பாகத்தில் ஆங்கிலம் தாய்மொழியாக இல்லாதவர்கள் 43.3 வீதம்

றொறன்ரோ பெரும்பாகத்தில் ஆங்கிலத்தைத் தாய் மொழிதாகக் கொண்டவர்கள் 55. 4 வீதமாகும், மிகுதி 43.3 வீதமும் கனடாவின் அதிகாரபூர்வ மொழியான ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள். இவர்கள் இருபத்தைந்துக்கும் அதிகமான தத்தம் தாய்மொழியைப் பேசுபவர்கள். ஒருவர் குழந்தையாக இருக்கையில் முதன்முதலில் பேசிய வீட்டு மொழியையே அவர்களின் தாய்மொழியாகக் கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் அடையாளம் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதி மீண்டும் ஒபாமா?




அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் இந்த மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது. ஜனநாயகக் கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா மீண்டும் போட்டியிடுகின்றார். இவரை எதிர்த்துப் போட்டியிடும் பிரதான வேட்பாளர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மிற் றொம்னி. இவர் முன்னர் (2003 - 2007) மசாசுசற்ஸ் மாநிலத்தின் கவர்னராகவிருந்தவர். அமெரிக்காவின் 57வது ஜனாதிபதியைத் தெரிவதற்கான தேர்தல் இது.

ஆரம்பத்திலிருந்து இரு வேட்பாளர்களுக்குமிடையில் சமநிலை காணப்பட்டதாயினும், அக்டோபர் 22ஆம் திகதி நடைபெற்ற தொலைக்காட்சி இறுதி விவாதத்தில் எதிர்பார்த்த மாற்றம் காணப்பட்டது. அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான இந்த விவாதம் ஒபாமாவின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்துள்ளது. மீண்டும் ஒபாமாவே அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகலாமென ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்க உபஜனாதிபதிக்கான தேர்தல் அடுத்த மாதம் (டிசம்பர்) 17ஆம் திகதி நடைபெறும்.

# எற்றோபிக்கோ மத்தி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு மீண்டும் ஊர்ஜிதம்

எற்றோபிக்கோ மத்திய தொகுதியின் எம். பி.-யாகக் கடந்த வருடத் தேர்தலில் தெரிவான றெட் ஒபிற்ஸ் வெற்றியை கனடா உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் 25ம் திகதி ஊர்ஜிதம் செய்தது. லிபரல் கட்சி வேட்பாளரான பொரிஸ் விசென்ஸ்நியுஸ்கியை விட 29 அதிக வாக்குகளால் இவர் வெற்றி பெற்றிருந்தாராயினும், வாக்களிப்பில் நிர்வாகக் குறைகள் இருந்ததாக அவரால் ஒன்ராறியோ உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு றெட் வெற்றி பெற்றதை நிராகரித்துத் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவரால் கனடிய உச்ச நீதிமன்றில் தாக்கலான வழக்கு கன்சர்வேடிவ் எம். பியான அவருக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கியுள்ளது.

# கனடிய லிபரல் தலைவர் போட்டியில் ஜஸ்ரின் ரூடோ
## Great Smile; Great Hair, Great Personality



ஜோன் கிரட்ஷியனுக்குப் பின்னர் 'மாட்டின் வால்' போல கீழ் நோக்கிச் செல்லும் கனடிய லிபரலுக்கு உயிரூட்ட வல்லவராகப் பலராலும் பார்க்கப்பட்டு வந்த ஜஸ்ரின் ரூடோ (40), தலைமையைக் கைப்பற்றும் களத்தில் நிஜமாகவே குதித்துள்ளார்.

கடந்த அக்டோபர் இரண்டாம் திகதி தமது முடிவை அறிவித்த ஜஸ்ரின், கனடாவின் முன்னாள் பிரதமர் பியர் ரூடோவின் மகன். அது மட்டுமன்றி இவரது தாயார் மார்கிரட்டின் தந்தை ஜேம்ஸ் சின்கிளெயர் கனடிய அமைச்சராகப் பதவி வகித்தவர். 1971 டிசம்பர் 25ஆம் திகதி பிறந்த ஜஸ்ரின் ரூடோ முதலில் 2008ல் கியுபெக்கின் பப்பினோ தொகுதி பிரதிநிதியாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி மீண்டும் 2011ல் தெரிவான இளம் அரசியல்வாதி. 2013 ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி லிபரல் தலைவர் தெரிவுக்கான கட்சியின் மாநாடு நடைபெறும்.

தலைமைப் பதவிக்கான உத்தியோகபூர்வ விண்ணப்பங்கள் ஏற்பு இந்த மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகி, அடுத்த மாதம் (2013 ஜனவரி) 14ஆம் திகதி முடிவடையும். "என் டி. பிக்கு ஒரு ஜாக் லேட்டன்; லிபரலுக்கு ஒரு ஜஸ்டின் ரூடோ" என்று சில ஊடகங்கள் இவருக்குப் புகழாரம் சூட்டி வர்ணித்துள்ளன.

"இவர் வயதில் இளையவர்; அரசியலில் போதிய அனுபவமில்லாதவர் என்று எவரும் தப்புக்கணக்கு போடக்கூடாது" என்று எச்சரித்துள்ள முன்னாள் பிரதமர் பிறையன் மல்றோனி, அப்படி யாராவது எண்ணினால் அவர்கள் வித்தியாசமான பாடம் கற்க நேரிடும் என்று கூறியுள்ளார். 'வசீகரச் சிரிப்பு, அழகான தலைமயிர், உன்னத ஆளுமை' ஆகியவை ஜஸ்டின் ரூடோவை லிபரல் தலைமைக்கு விரைந்து கொண்டு செல்லும்" என்று The Varsity பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜஸ்ரினுடன் கூடப் பிறந்தவர்கள் அலெக்சாந்தர், மைக்கல் என இரு சகோதரர்கள். இவர்களுள் மைக்கல் 1998ல் பனிச்சறுக்கலில் ஈடுபட்டிருந்தபோது அகால மரணமடைந்தார். தந்தை பியர் ரூடொ 2000ம் ஆண்டில் காலமானார். அரசியலில் ஈடுபடாது போர்க்கள ஊடகவியலாளராக இதுவரை பணியாற்றி வந்த அலெக்சாந்தர்(38) தமது அண்ணனின் லிபரல் தலைமைப் போட்டியில் அவருக்கு முக்கிய ஆலோசகராக மாறியுள்ளார்.

ஜஸ்ரின் ரூடோ கட்சித் தலைவரானால் அடுத்த பொதுத்தேர்தலில் லிபரல் கட்சி கூடிய ஆசனங்களை வெற்றி கொள்ளலாம். ஆனால், ஆட்சியைக் கைப்பற்றுமா அல்லது பிரதான எதிர்க்கட்சியாகுமா என்பதை இப்போது சொல்ல முடியாது.

கியுபெக் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவிருந்த முன்னாள் 'மொடல்' சோபி இவரது மனைவி. பரப்புரை அரங்குகளில் இவரும் சேர்ந்து காட்சியளிப்பது ஜஸ்டினுக்கு ஒரு 'பிளஸ் பொய்ன்ட்'. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு.●



# பீல் பிரதேசத்தின் முதலாவது பெண் பொலிஸ்மா அதிபர்

பீல் பிரதேச பொலிஸ்மா அதிபராக ஜெனிபர் இவான்ஸ் கடந்த மாதம் பதவியேற்றுள்ளார். 1983ம் ஆண்டு பீல் பொலிஸில் ஒரு 'கடேற்'றாகச் சேர்ந்த இவர், கடந்த மாதம் ஆரம்பம்வரை அதன் பிரதி பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்தார். மிசிசாகா, பிராம்டன், கலிடோன் ஆகிய நகரங்களை உள்ளடக்கிய பீல் பிரதேசத்தின் முதலாவது பெண் பொலிஸ்மா அதிபர் இவராவர். பதினொன்றரை லட்சம் மக்கள் வசிக்கும் பீல் பிரதேசம், ஒன்ராறியோ மாகாணத்தின் இரண்டாவது பெரிய பொலிஸ் பிரிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன் மனநோய் நிபுணர்

# நோயில்லாத ஒரு நோய் மனக் கஷ்டம் - Stress

Stress என்ற வார்த்தை மேற்கத்திய நாடுகளின் மிகவும் சர்வசாதாரணமாகப் பாவிக்கப்படுகின்றது. எதற்கு எடுத்தாலும் Stress என்கிறார்கள். Stress என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கஷ்டங்கள் அல்லது தொல்லைகள் என்று தமிழில் கூறலாம். எமது தாய் நாட்டில் நாம் வாழும் பொழுது வாழ்க்கை stressful ஆகத் தெரியவில்லை. ஆனால் இங்கு எதை எடுத்தாலும் Stress ஆக இருக்கின்றது.

வேலைக்குப் போனாலும் அங்கு Stress; வேலைக்குப் போகாவிட்டாலும் Stress; வீட்டில் இருந்தாலும் மனம் நிம்மதியாக இருப்பதில்லை; பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலையில் கல்வி கற்கின்றார்களா என்று யோசித்து பெற்றோருக்கு Stress. Stress பற்றி நான் கூறத் தேவையில்லை. வேலை இருந்தாலும் இப்போதைய பொருளாதார நிலைமையில், வேலையால் நிறுத்தி விடுவார்களோ என்று எண்ணிப் பயந்து, அதனால் ஏற்படும் Stress பற்றிப் பலருக்கும் தெரியும், வேலை இல்லாது மனம் குன்றி, மற்றவர்களுடன் பழகுவதைக் குறைத்து, மனவேதனைப்படுவதால் ஏற்படும் Stress என்று சொல்லிக் கொண்டே போகலாம். சுருக்கமாகக் கூறினால் மேற்கத்திய நாடுகளில் வாழ்க்கையே ஒரு Stress என்று கூறினால் மிகத் தகும்.

ஆகவே அடுத்த கேள்வி எதற்காக இந்த அளவு Stress ஐ நாம் அடைய வேண்டி இருக்கின்றது? எதற்காக எமது மனம் சாந்த நிலையை அடைய முடியாமல் இருக்கின்றது என்பதே? இதற்குப் பலர் பலவிதமான காரணங்களைக் கூறி இருக்கின்றார்கள். இவற்றில் Social Isolation, lack of interaction with the community & lack of support from the community ஆகும்.

இதில் முதல் கூறிய social Isolation பற்றிச் சில வார்த்தைகள். இங்கு வாழும் மக்கள் "தாம் உண்டு தமது தொழில் உண்டு" என்று தனித்து வாழப் பழகிக் கொள்கின்றார்கள். இதனால் எமக்கு இன்னல்கள் ஏற்படும் வேளைகளில், ஒருவரும் உதவிக்கு இல்லையே என்று ஒரு ஏக்கம் ஏற்படுகின்றது. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேலான தமிழர்கள் ரொறன்ரோவில் வாழ்ந்தாலும் கஷ்டம் ஏற்படும் பொழுது தனித்து நிற்கின்றோம். திசை தடுமாறி மனம் குழம்புகின்றோம். இது நாமாகவே தேடிக்கொண்ட Stress. இதைத் தான் Social Isolation என்று இங்கு குறிப்பிடுகின்றோம்.

இப்படியான தனித்த நிலைமைக்கு எமது இன்றைய சூழ்நிலைக்கு மனம் தள்ளிக்கொண்டு போய் விடுகின்றது. வேலையால் வந்த களைப்பு, 6 மாதம் பனிக்குளிரில் வெளியே போகவே மனம் விருப்பமடையாது. வீட்டில் இருக்கும் சோலி சச்சரவுகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். வார இறுதியில் shopping செய்ய வேண்டும், Birthday Party க்குப் போக வேண்டும் என்ற அங்கலாய்ப்பு - கண்ணை மூடி முழிப்பதற்கு முன்னர் திங்கட்கிழமை வந்து விடுகின்றது. வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதை-தான்.

இந்த மாதிரியான இயந்திர வாழ்க்கையில், எம்மை அறியாது நாம் எமது நண்பர்களோடும், இனத்தவர்களோடும் பழகுவதைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்ளக்கூடும். ஒரு கல்யாண வீட்டில் அல்லது ஒரு மரணச் சடங்கில் கதைத்தால் அதுவே ஒரு பெரிய காரியமாகிவிடுகின்றது. இங்கு நான் என்ன கூறுகின்றேன் என்பதை விளக்கத்தேவையில்லை. இப்படியான தனிமையை நாம் தவிர்க்க வேண்டும். தொல்லைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள் வரும் போது தான் மற்றவர்களின் அன்பு வார்த்தைகளும், ஆதரவும் தேவைப்படுகின்றன. ஆனால் இவ்வளவு நாட்களும் விலகி இருந்து விட்டு எமக்குத் தேவையான போது மாத்திரம் நல்ல நண்பர்களும் அன்புள்ள இனத்தவர்களும் வேண்டுமென்றால், அப்படிக் கிடைப்பது மிகவும் அரிது.

ஆகவே இந்த மாதிரியான நிலைக்குத் தள்ளப்படுவதை நாம் தவிர்க்க வேண்டும். எமக்கு 100 நண்பர்கள் தேவையில்லை. அதே வேளையில், நல்ல மனமுள்ள ஒரு சிலராவது தேவை. கடவுள் இவர்கள் மூலமாக எமக்கு உதவுவதைப் பலர் அறிவர்.

அடுத்ததாக, community interaction பற்றிச் சில வரிகள். அதாவது சமுதாயத்துடன் கலந்து வாழுதலைப் பற்றி. ஒருவராக இருந்தால் அது தனிமை. இருவர் சேர்ந்தால் குடும்பம். குடும்பங்கள் பல சேரும் போது அது ஒரு கூட்டம். இந்தக் கூட்டங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இயங்கும் பொழுது அது ஒரு சமுதாயமாக மாறுகின்றது. மனிதன் என்னும் பிராணி பொதுவாக சமுதாயத்தோடு சேர்ந்து இயங்குபவன். எமது சமுதாயத்தின் நன்மை தீமைகளிலும், இன்ப துன்பங்களிலும் நாம் பங்கு பெறும் பொழுது எமது 'மனம் பூரிப்படைகின்றது; மனம் நிறைவு பெறுகின்றது.

எமக்கு மிகவும் நெருங்கிப் பழகியவர் நம்மை விட்டுப் பிரியும் பொழுது மனம் சொல்லொண்ணாத வேதனையை அனுபவிக்கின்றது. அதே வேளையில் எமது துக்கத்தை சமுதாயத்தோடு பகிரும் பொழுது மனம் சிறிது சாந்தமடைகின்றது. இதனால் எமக்கு ஏற்படவிருக்கும் Stress ஐ நாம் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எமது மக்களில் பலர் ஈழநாட்டில் வாழ்ந்த பொழுது எத்தனையோ இன்னல்களை அனுபவித்து இருக்கின்றார்கள். ஆனால் அவர்களில் பலர் கூறக் கேட்டிருப்பது என்னவென்றால் "அங்கே ராணுவத்துக்குத் தப்பி ஓடி ஒளித்து இருந்து ஒருநேரக் கூழைக் குடித்து இருந்தாலும் இருக்கலாம், இங்கே மனம் எவ்வளவு தான் இருந்தாலும் சந்தோஷமாக இல்லை" என்பதே.

இன்றைய நிலை மிக மோசமான அளவிற்கு மாறிவிட்டதை நாம் அறிவோம். அப்படி இருந்தாலும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பதால் எமது வேதனையை ஒரு அளவு தாங்கக் கூடியதாக இருக்கின்றது. 2ம் உலக யுத்தத்தின் போது மக்கள் எல்லோரும் அனுபவித்த துன்பங்களை நாம் அறிவோம். அதே வேளையில், இவர்கள் Depression போன்ற வருத்தங்களால் தாக்கப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதற்குக் காரணம் மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு சமுதாயமாகச் செயல்பட்டதே.

இன்றைய ஆராய்ச்சியின்படி 5ல் ஒரு கனடியன் தனது வாழ்க்கையில் ஒரு பகுதியிலாவது Depression ஆல் தாக்கப்பட்டு இருக்கலாம் என்று அறிகின்றோம். ஆகவே புலம் பெயர்ந்த மக்களாகிய நாம், எமது சமுதாயத்தில் ஊக்கமும், அக்கறையும், ஆதரவும் காட்டினால், அது எமக்கு நன்மை பயக்கும் என்பதில் ஒருவித ஐயமும் இல்லை. நாம் எல்லோரும் எல்லாவித சமுதாய அலுவல்களிலும் ஈடுபட முடியாது. ஆனால் சில நேரத்திலாவது, சிலவற்றில் ஈடுபடுவது நன்று என்று நம்புகின்றோம்.

(அடுத்த இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

# கல்லறைகள் நீங்கிக் கருவறையாக மாவீரர்

முன்தோன்றி ஈழத்தில்
மூத்தகுடி தமிழர்நாம்!
பின்வந்து குடியேறிப்
பெருகியவர் சிங்களவர்!

முன்வந்த செவிகளினைப்
பின்முளைத்த கொம்பன்கள்
இன்றுமறைத் தீழத்தை
ஏப்பம்விடப் பார்க்கின்றார்!

"இன்னும்நாம் பொறுத்திருந்தால்
எங்களினம் முற்றாகச்
சின்னபின்ன மாகிவிடும்
சிதைந்தழியும்!" எனஅன்று

சிந்திக்கத் தெரிந்திருந்தீர்,
தீரமிகு இளையோரே!
சொந்தபந்தம், தன்னலங்கள்,
சுகம்யாவும் துறந்தீர்கள்!

விடுதலைப்போர் வேள்வியிலே
வீறுகொண்டு குதித்தீர்கள்!
அடுகளங்கள் பலநூறில்
ஆகினீர்மா வீரர்களாய்!

மதவெறிக்கு, இனவெறிக்கு,
மண்கொள்ளைக் கெதிராக,
இதயமற்ற ஒடுக்குமுறை,
அடக்குமுறைக்கு எதிராக,

அடிபட்டே, அடிபட்டே
ஆயிரமாய் வீழ்ந்தீர்கள்!
விடுதலைக்காம் மாவீர
வித்துகளாய் உயர்ந்தீர்கள்!

சுயநலங்கள் உள்நோக்காய்த்
தோள்தரவே சேர்ந்தோர்தம்
சுயமைகள்கால் வாரிடினும்
கடந்தவற்றை முன்னகர்ந்தீர்!
மூன்றுபத்து நாடுகளின்
மூர்க்கம் மிகு சதிகள், நம்
ஆன்மபலக் குறைவாலே
அழிப்புண்டோம்!
மீண்டெழுந்தோம்!

கப்பலுக்குள் நுழைகின்ற
கடல்நீரின் கவலையின்றி
மப்படித்துக் கூத்தாடும்
மடமைபோல் தமிழருக்குள்

இன்றீழம் எரிகையிலும்
எடுத்துத்தற் புகழ்ச்சிவிழா
தின்றாடும் செயல்முற்றாய்ச்
செத்தநிலை கண்டிடுவீர்!

பத்துக்கோடி நம்மனங்கள்,
பாதிலட்சம் நும்முயிர்கள்
மொத்தமாக மூண்டெரிந்தும்
முள்ளிவாய்க்கால் முடிவல்ல!

வீடொன்றின் பிள்ளைகளாய்
மேதினியில் உதித்தவர் நீர்!
நாடொன்றின் பிள்ளைகளாய்
நல் 'பிதாக்கள்' ஆனீர்கள்!

ஓரன்னை, ஒருதந்தை
உரிமைசொல்ல வந்தவர்நீர்,
பாரன்னை தந்தையெல்லாம்
பரிந்துருகச் சென்றீர்கள்!

ஓரன்னை ஒருதந்தை
ஊமைகளாய் அழுதங்கு!
பாரன்னை தந்தைநாமோ
பயமின்றிப் புலத்துள்ளோம்!

புதல்வர்களே! புலத்தில்நாம்
புயலாய் உழைக்கின்றோம்!
அதிர்கின்ற அன்றெம்மை
அழித்த அந்தநாடுகளும்!
ஒருபக்கம் அறம், இறையை
உயிராகப் போற்றுகிறோம்!
ஒருபக்கம் மண்மீட்க
உக்கிரமாய் உழைக்கின்றோம்!

கருவறைகள் தோறும்நீர்
கமழ்பூவாய் அரும்புகிறீர்!
விரைகிறது நம்விடிவு!
விடிவெள்ளி தெரிகிறது!

மாவீர ராய்ச்சென்று
மன்னவராய் மீள்பவரே,
சாவாத தர்மம்இதோ
தலைதூக்கி எழுகிறது!

"வா! காப்போம்" எனப் பகைவன்
வலைவீச வும்விட்டுப்
போகாமல் காத்தற்காய்ப்
புலிச்சேய்கள் உங்களினைச்

சூழ்ந்துநின்று நச்சுவாயுக்
குண்டு, கொத்துக் குண்டுகளால்
வீழ்ந்த ஒன்றரை லட்சம்
வீர, ஈரத் தமிழர்களாய்

காவல் கடவுள் உங்கள்
காவல் தெய்வங்களையும்
பூவல்ல, பொன்சொரிந்து
போற்றிடுவோம்! அவர்க்குமெனப்

பூந்தொட்டில்கள் நாட்டிப்
பொன்னூஞ்சல் கள்கட்டி
நாந்தமிழர் அரும்பீழ
நல்லரசில் காத்திருப்போம்! ●

## மீண்டும் விருட்சமாய்....

முள்வேலியும் எமக்கு
முளைவேர்தான்.
முள்வேலி குத்தும்
போதெல்லாம்
முளைவிடும் எண்ணங்கள்
மீண்டும் ஒரு முறை
விருட்சமாய் விரியலாம்!
நான் தமிழன்.

சிவ. கஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா? 26

நாம் கற்பனை செய்யும்போது மனத்தின் எண்ணங்கள் படங்களாக விரிகின்றன. அவை கனவில் ஆழ்மன எண்ணங்களாகவும் புதைந்துள்ளன. அந்த நிகழ்ச்சிகள் பெரும்பாலும் உருவகங்களாக வெளிவருகின்றன. பொதுவாக ஆழ்மனம் எதனையும் நேரடியாக சொல்வதில்லை. ஓர் உருவகமாக வெளிப்படுத்துகின்றது. இந்த சூழ்நிலையில் பல்வேறு கற்பனைகளும் தோன்றி மறைகின்றதைத் தொடர்ந்து முடிவற்று செல்கின்றன. எல்லாமே மனதின் வேலைதான்.

சொர்க்கம், நரகம் என்று அடிக்கடி பேசுகின்றோம். மேலேயும் கீழேயும் விரல்களை நீட்டியும் பேசுகின்றோம். உண்மையில் மேலுமில்லை, கீழுமில்லை. எல்லாமே பழக்கதோஷந்தான். எதனையும் சிந்திக்காத மனது தெரியாததொன்றை தேடும்போதுதான் இதனை தேடுகிறது. மனம்தான் நரகமும் சொர்க்கமும். மனம்தான் ஆத்மாவுமாகின்றது. சாவுக்கு அப்பாலும் வாழ்கிறது. இவ்வுலக வாழ்க்கையில் எத்தகைய எண்ணங்களை போட்டு வைத்து – மனத்தை அடைத்து வைத்தோமோ அதே எண்ணங்கள்தான் தொடர வாய்ப்புண்டு. இவ்வாழ்க்கையின் நோக்கமே நல்ல எண்ணங்களாலும், நல்ல செய்கைகளாலும் பக்குவப்படுத்துவதுதான்.

வாழ்க்கை என்பது அன்பென்னும் பந்தத்தால் இணைந்த பிரபஞ்ச இயக்கம். ஆகவே நாம் எங்கும், எத்துடனும் அன்பால் பிணைக்கப்பட வேண்டும். அதில் மகிழ்ச்சி உண்டாகின்றது. மகிழ்ச்சிக்கு அடிப்படையே மனம் என்றால் அதன் மகத்துவம் பெரியது, வலிமையானது. வாழ்வின் திறவுகோல் அன்புதான், அறிவுதான். மகிழ்ச்சி என்பது நாமே உருவாக்கிக் கொள்ளக்கூடிய மனநிலை. பிறரோ சூழ்நிலையோ தருவதில்லை. மனம் நல்லெண்ணங்களின் பிறப்பிடமாகும்போது, அங்கிருந்து "சூரியக் கதிர்கள்" புறப்படுகின்றன. மனத்திலிருந்து நல்லெண்ணம் புறப்படும்போது எதிர்ப்பும், பொறாமையும், பொறுப்பும், கோபமும் எம்மை ஒன்றும் செய்ய முடியாது. அப்படி ஒரு உயர்ந்த வாழ்க்கையை நாமும் வாழ வேண்டும்.

உயர்ந்த வாழ்வுக்கு தியானமும் ஒரு வழி என்று அறிஞர் கூறுவர். தியானமும், பிரார்த்தனையும் மனம் எதை விரும்புகிறதோ அதை அடைய வைக்கிறது. நிறைவும் நிம்மதியும் வேண்டுமென பிரார்த்தித்தால் அதுவே கிடைக்கும். மனம், நாம் கேட்டவற்றைக் கொடுக்கும் ஒன்று. தனது நன்மை பற்றியே கருதும் இயல்பு. இது ஒரு தன்னியக்கம். இரண்டாவது தனக்கு அப்பால் சென்று பிரபஞ்சப் பொருட்கள் அத்தனையுடனும் இணைந்து நின்று உலக நன்மைக்காகப் பாடுபடும் ஓர் இயக்கம். மூளையின் இடது பக்கத்தில் எமது அன்றாட அலுவல் பற்றிய சிந்தனைகள், எழுதுதல், சாப்பிடுதல், விவாதித்தல் போன்ற காரண காரிய தொடர்புச் சிந்தனைகள் நிகழ்கின்றன. ஆனால் மூளையின் வலதுபக்கத்தில் ஆழ்மன உணர்வுகள், கனவுகள், பிரபஞ்சத் தொடர்புகள் எல்லாம் நிகழ்கின்றன. மூளை திடப்பகுதி என்றால் மனம் சக்தி கொண்ட நினைவுப் பகுதியாகும். சுருங்கக் கூறின் எமது செயல்கள் இடது பகுதியிலும் ஆழ்மன பிரபஞ்ச தொடர்புகள் வலது மூளையிலும் நிகழ்கின்றது.

மனம் எப்படி நினைவு நிலையில் இயங்குகிறது, எப்படி கனவு நிலையில் இயங்குகிறது, எப்படி சிறந்த நிலையில் இயங்குகிறது என தெரிந்து கொள்ளும்போதுதான் வாழ்க்கைத் தொடர்பு புரிகின்றது. அது ஏதோ ஒரு பரிணாம வளர்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.●

## இப்பவேயா..

பிளேட்டுகளை கொண்டுவந்து வைத்தாள். துடையுடன் கால் ஒட்டிய கோழியின் பெரிய உடல் பகுதி பிளேட்டை நிறைத்துக் கிடந்தது. கத்தியை எடுத்து வெட்டுவதா அல்லது கொஞ்சம் தாமதிப்பதா என யோசித்தான் இளைஞன். அவன் மனம் முழுக்க வேறு எங்கோ இருந்தது. பில்லியனர் வருவதாகச் சொல்லியிருந்தார், ஆனால் வரவில்லை. மனம் பதைபதைத்தது. ஒருவேளை மறந்துவிட்டிருப்பாரோ? அவர் வரவில்லை என்றால் அவன் எதிர்காலம் முடிந்தது. அவனுடைய மாத வருமானத்தில் சரி அரைவாசி உணவகத்துக்கு அன்று அவன் கொடுக்கவேண்டி இருக்கும். இப்படியெல்லாம் மனம் அவஸ்தைப்பட்டாலும் அவன் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அந்த நேரம் பார்த்து பில்லியனர் டக் டக்கென நடந்து வந்தார். இவனுடைய நெஞ்சு அவர் நடந்து வந்த சத்தத்திலும் பார்க்க உரக்க அடிக்க ஆரம்பித்தது.

பில்லியனர் யோசித்தார். இளைஞன் தலையை மட்டும் அசைக்கச் சொல்லியிருந்தான். ஒரு படி மேலேபோய் அவனுக்கு உதவி செய்தால் என்ன? இளைஞனின் மேசையை அணுகியதும் பில்லியனர் சற்று நின்று 'ஆ, நண்பரே' நலமா? அடுத்த புதன்கிழமை நாங்கள் ஒன்றாக மதிய உணவு அருந்துவோம். என்ன சொல்கிறீர்கள்?' கோழிக்காலை வெட்ட ஆரம்பித்த இளைஞன் அதை நிறுத்திவிட்டு தலையை நிமிர்த்தினான். அழைப்பில்லாமல் ஞாயிறு மதியம் வீட்டுக்கு தூசி உறிஞ்சி விற்க வந்த விற்பனையாளரைப் பார்ப்பதுபோல அவரைப் பார்த்தான். 'இப்பவேயா? சொல்லமுடியாது. என்னுடைய காரிய-தரிசியை தொடர்புகொண்டு தேதி கேட்டுப் பாருங்கள்.' எங்கேயோ ஓடிவிடும் என்பதுபோல மறுபடியும் கோழிக்காலை விட்ட இடத்திலிருந்து வேகமாக வெட்டத் தொடங்கினான். பில்லியனர் திகைத்து அசையாமல் நின்று பின் தயங்கியபடி நகர்ந்தார். இளைஞனின் ஒப்பந்தம் அன்றே கையொப்பமானது. பில்லியனருடைய கோபம் வழிந்து ஓடி முடிய இரண்டு நாள் பிடித்தது.

உதவி செய்யும்போதுகூட எத்தனை எச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இப்பவேயா?

பல வருடங்களுக்கு முன்னர் நடந்தது. என் மகனுக்கு அப்ப சின்ன வயது. பள்ளிக்கூடங்கள் சிறுவர்களை தண்டிப்பதற்காக கட்டப்பட்ட கட்டிடங்கள் என்பதை அவன் அந்த வயதிலேயே கண்டுபிடித்துவிட்டான். பள்ளிக்கூட நாட்களில் காலையில் அவனை உருட்டி உருட்டித்தான் எழுப்பவேண்டும். பள்ளிக்கு போகமுன்னர் ஒவ்வொருநாளும் உணவு மேசையை சுற்றி பத்து தடவை ஓடிவிட்டுத்தான் புறப்படுவான். ஆனால் சனி, ஞாயிறு நாட்களில் அதிகாலையிலேயே எழும்புவான். அந்த நாட்களில் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்கக்கூடாது என்பதில் அவனுடைய உறுதி தெரியும். வெளியே விளையாடப்போனால் இருட்டிய பின்னர்தான் வீடு திரும்புவான். நான் சொல்வேன் 'இன்று முழுக்க விளையாடியது போதும். இனி படிக்கலாம்.' 'இப்பவேயா?' என்பான். 'இல்லை அடுத்த கிறிஸ்மஸ் வரும்போது' என்பேன் நான். இந்த சம்பாசணை நடக்கும்போது இரவு எட்டு மணியாகியிருக்கும்.

கனடாவில் என் பக்கத்து வீட்டுக்காரர் என்னுடன் பேசுவது தொலைபேசியில்தான். நான் ஒரு காலத்தில் வேலை செய்த பாகிஸ்தானின் அதே கிராமத்தில்தான் அவர் பிறந்திருந்தார். ஆகவே அவர் மொழியிலே வணக்கம் சொல்வார். நானும் சொல்வேன். அத்துடன் என்னுடைய மொழி அறிவு முடிந்துவிடும். அவருடைய தொலைபேசி அழைப்பு மணி அதிகாலையில் வெளிநாட்டு டெலிபோன் அடிப்பதுபோல அவசரமாக அடிக்கும். நானும் அவசரமாக எடுப்பேன். நலம் விசாரித்துவிட்டு ஓர் உதவி என்றார். சொல்லுங்கள் என்றேன். எங்கள் வீட்டில் இரண்டு நாட்கள் குடும்ப ஒன்றுகூடல் நடக்கிறது. உங்கள் வீட்டு கார் பாதையில் எங்கள் காரை நிறுத்த அனுமதிவேண்டும் என்றார். அதற்கென்ன, சரி என்றேன்.

சற்று நேரம் கழித்து நான் வெளியே புறப்பட ஆயத்தமானபோது காராஜில் இருந்த என் காரை வெளியே எடுக்க முடியவில்லை. கிரேக்க எழுத்து 'பை' போல இரண்டு காரை பக்கத்து பக்கத்திலும் ஒரு காரை மேலே குறுக்காவும் நிறுத்தி என் கார் பாதையை முற்றிலும் நிரப்பிவிட்டார். என்னுடைய காரை நான் எப்படி வெளியே எடுப்பேன் என்று ஒருவர்கூட யோசித்ததாகத் தெரியவில்லை. விருந்தாளி ஒருவர் காரை குறுக்காக நிறுத்தியதும் அல்லாமல் சாவியை எடுத்துக்கொண்டு இன்னொருவருடன் வெளியே போய்விட்டார். நான் பக்கத்து வீட்டுக்காரரிடம் அவசரமாக வெளியே போகவேண்டும் என்று சொன்னபோது அவர் 'இப்பவேயா?' என்றார்.

அமெரிக்காவில் ஒரு பில்லியனர் இருந்தார். கோடி கோடியாகச் சம்பாதித்த தொழிலதிபர். இளம் தொழில் நிபுணர்கள் பலர் அவருடைய கடைக்கண் பார்வைக்காக ஏங்கி காத்திருப்பார்கள். ஒவ்வொரு புதன்கிழமையும் இந்த கோடீஸ்வரர் முதல்தரமான உணவகம் ஒன்றிற்கு சென்று உணவருந்துவார். அவருடன் வேறு தொழிலதிபர் ஒருவரோ இருவரோ இருப்பார்கள். மதிய விருந்து முடிந்து அவர்கள் உணவகத்தை விட்டு வெளியேறும்போது பில்லியனர் முகத்தில் சிறு புன்னகை அரும்பியிருக்கும். முக்கியமான ஓர் ஒப்பந்தம் அவர்களுக்குள் முடிவாகியிருக்கும்.

மிக நேர்த்தியாக அலுவலக உடையணிந்த ஓர் இளைஞன் புதன்கிழமை தோறும் மதிய நேரத்தில் உணவக வாசலில் காத்திருப்பான். அவனுக்கு வயது 30 இருக்கும். புத்திக்கூர்மையான கண்கள். சும்மா இருக்கும்போதே புன்னகை செய்வதுபோன்ற முகம். பில்லியனர் உணவகத்துக்குள் நுழையும்போது இளைஞன் அவருக்கு வணக்கம் சொல்வான். அவர் உணவருந்திவிட்டு திரும்பும்போதும் இளைஞன் அதே இடத்தில் நிற்பான். மறுபடியும் வணக்கம் சொல்வான் அவரும் சொல்வார். இது பல மாதங்களாகத் தொடர்ந்தது.

ஒருநாள் பொறுக்கமுடியாமல் பில்லியனர் கேட்டார், 'உனக்கு என்ன வேண்டும்?' இளைஞன் சொன்னான். 'ஐயா ஓர் உதவி. மிகச் சின்னதுதான். இந்த நாட்டிலே உங்களைத் தெரியாதவர் ஒருவர் இருக்கமுடியாது. நீங்கள் பிரபலமானவர். அடுத்த புதன்கிழமை இதே உணவகத்தில் ஏழாவது மேசையில் நான் தொழிலதிபர் ஒருவருடன் அமர்ந்து உணவருந்துவேன். அந்த தொழிலதிபர் என்னுடன் ஒப்பந்தம் செய்ய தயங்குகிறார். பல மாதங்களாக ஒப்பந்தத்தில் கையொப்பம் வைக்காமல் இழுத்தடிக்கிறார். நீங்கள் செய்யவேண்டியது ஒரு சின்னக் காரியம்தான். என்னுடைய மேசையை கடந்து போகும்போது சற்று நின்று என்பக்கம் திரும்பி பார்த்து தலையை மேலும் கீழுமாக அசைக்கவேண்டும். அவ்வளவுதான்' என்றான். பில்லியனர் தன் ஆரம்பகால வாழ்க்கையை யோசித்துப் பார்த்தார். எத்தனையோ இன்னல்களைக் கடந்துதான் இன்றைக்கு இந்த பெரிய நிலையை அடைந்திருக்கிறார். அவர் இளைஞனுடைய முகத்தை உன்னிப்பாகப் பார்த்தார்.
'நீ என்னை உபயோகிக்கப் பார்க்கிறாய்' என்றார்.
'ஓரளவுக்கு உண்மைதான், ஐயா.'
'அவரை ஏமாற்ற நினைக்கிறாய்' என்றார்.
'அப்படியும் வைக்கலாம், ஐயா.'
'உடைந்த முட்டையில்தான் ஈ உட்காரும்.'
'மிகவும் சரி, ஐயா' என்றான் இளைஞன்.

பில்லியனர் ஒன்றுமே பேசவில்லை. அவருடைய நீண்ட மேலங்கி குளிர்காற்றில் இருபக்கமும் அசைய காரை நோக்கி நடக்கத் தொடங்கினார். வெள்ளைத் தொப்பி அணிந்த கார்ச்சாரதி கதவை திறந்து பிடித்துக் கொண்டிருந்தான். இளைஞன் நம்பிக்கை இழக்காமல் 'ஏழாம் நம்பர் மேசை' என்று பின்னால் கத்தினான்.

அடுத்த புதன்கிழமை இளைஞன் ஏழாம் நம்பர் மேசையில் அமர்ந்து ஒரு தொழிலதிபருடன் பேசிக் கொண்டிருந்தான். அவர்கள் மேசை மேல் இரண்டு நீண்ட காம்பு வைன் குவளைகளில் பொன்வண்ண திரவம் நிரம்பியிருந்தது. கண் மடல்களில் மஞ்சள் பூச்சு பூசிய பரிசாரகி அவர்கள் முன் இரண்டு அகலமான

← (8ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*



# கழிவறை தினம்

உலகில் சர்வதேச தினம் எதற்கு என்ற விவஸ்தையே கிடையாதா என முனகவைப்பது நவம்பர் 19.

கழிவறை தினமாக அதனை ஏற்றுக்கொள்பவர்கள் மூக்கைப் பிடிப்பதுமில்லை. முகத்தைச் சுழிப்பதுமில்லை. சுகாதார வசதிகளின்றி நோயுற்றவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இத்தினம் ஆவன செய்வதாகக் கருதப்படுகின்றது.

உலகின் கழிவறைகளுக்கான உச்சி மகாநாடு 2001 ஆம் ஆண்டு முதன்முதலாக சிங்கப்பூரில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 15 உறுப்பு நிறுவனங்களுடன் உருவான உலக கழிவறை மன்றில் தற்பொழுது 53 நாடுகளைச்சேர்ந்த 151 நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன. உலக கழிவறை கல்லூரி ஒன்றையும் இந்த மன்றம் சிங்கப்பூரில் இயக்குகின்றது.

2001 சிங்கப்பூர் 2002 தென் கொரியா 2003 தைவான் 2004 சீனா 2005 வட அயர்லாந்து 2006 ரஷ்யா 2007 இந்தியா 2008 சீனா 2009 சிங்கப்பூர் 2010 வடஅமெரிக்கா 2011 சீனா ஆகிய நாடுகளில் இதுவரை நடைபெற்ற கழிவறை உச்சி மகா நாடுகள் இந்த வருடம் தென் ஆபிரிக்காவில் இடம்பெறவுள்ளது.

10 000 பாரிய கழிவறை கடதாசி சுருள்களால் உருவாக்கிய திருமண ஆடையை அணிந்த மிச்சிக்கன் மாநில மங்கையான சுசன் பிரனென் 25 000 டாலர்களை கடந்த வருட கழிவறை தின போட்டியில் தனதாக்கினார்.

நாளொன்றுக்கு 6 - 8 தடவைகள் வீதம் வருடமொன்றுக்கு 2500 தடவைகள் என ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் சராசரியாக மூன்று வருடங்களை கழிவறையில் கழிக்கின்றனராம்.

பின்தங்கிய நாடுகள் பலவற்றில் 7% கழிவறைகளும் 19% தொலைக் - காட்சிகளும் பாவனையில் உள்ளன.

கழிவறை மலசல கூடம் கக்கூஸ் வெளிக்கு காட்டிற்கு வடலிக்கு குளத்திற்கு என்பன எம்மவர்களிடையே புழக்கத்தில் உண்டு. Toilet washroom, outhouse, powder room, ladies, lavatory, potty, women's room, bog, necessary, dunny, bathroom, gents, men's room, khazi, convenience, garderobe, restroom, place of easement, privy, john, potty, water closet, the smallest room, can, little girls' or boys' room, facilities, and throne room. போன்றனவும் தமிழ் மக்களுக்கு புதிதாகவிராது.

Toile என்ற பிரன்சு வார்த்தைதான் ஆங்கில Toilet தோன்றக் காரணமானது. சிறிய துணி என அதற்கு அர்த்தம். காகித பாவனைக்கு முன்பாக சிறு துணி கொண்டே சுத்திகரிப்பு நடந்தது.

புகையிரதத்தின் மனித கழிவுகளை பாதையிலே கொட்டிச்செல்வதால் உலகின் மிக நீளமான கழிவறைகள் என ஆசிய புகையிரத தண்டவாளங்கள் சொல்லப்படுவதுண்டு.

சாதாரணமான விமானங்களில் உள்ளது போன்று கழிவறைகள் இல்லாதிருப்பதால் விண்வெளி செல்லும் விண்ணர்களின் கழிவுகள் விண்வெளியிலேயே வீசப்படுகின்றன. எனினும் உலகிற்கு வெளியே உள்ள மிகப் பரந்த கழிவறைகள் என யாருக்கும் சொல்லும் தைரியம் இதுவரை வந்ததில்லை.

ஹொங் ஹொக் நகரில் உள்ள சுவர்ண மண்டபத்தில் உல்லாசப் பயணிகளை கவர்வதற்காக முழுக்க முழுக்க 24 கரட் தங்கத்திலான உலகின் முதலாவது கழிவறை உருவாக்கப்பட்டது. அரண்மனைகள மாளிகைகள் பயண விடுதிகள் என வித்தியாசமான 68 இடங்களில் தங்கக்கழிவறைகள் தற்பொழுது பாவனையில் உண்டு.

1890 ம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் முதன்முதலாக கழிவறை சுருள்கள் பாவனைக்கு வந்தன.

உலகிலே மிகச் சிறந்த பொது இடக்கழிப்பறைகள் ஜப்பானிலும் மிக மோசமானவை இங்கிலாந்திலும் உள்ளன.

வரிசையாக உள்ள கழிவிடங்களில் வாசலுக்கு அருகில் உள்ளதே பலராலும் இறுதியாக பயன்படுத்தப்படுவதால் அது அனேகமாக இறுதிவரை சுத்தமாகவே இருக்கும். (The first toilet cubicle in a row is the least used and consequently cleanest)

சைக்கோ என்ற புகழ்பெற்ற திரைப்படத்தில்தான் கழிவறைக் காட்சிகள் முதன்முதலாக திரையில் காட்டப்பட்டது.

மாதுளம் பழமும் கிராம்பும் கழிவறையின் காற்றை தூய்மைப்படுத்த அநாதியில் பயன்பட்டன.

எல்லாம் சரி. ஆனால் போராட்ட காலங்களில் ஆபத்து நிறைந்த பகுதிகளில் எமது வீரர்கள் அந்த முடுக்கினை எப்படித்தான் அடக்கினரோ?

---

## மூன்று தொகுதிகளில் இந்த மாதம் 26ல் இடைத்தேர்தல்

ஒன்ராறியோவில் டுர்ஹாம் தொகுதி, மேற்குக் கனடாவில் கல்ஹேரி மத்தி மற்றும் விக்டோரியா ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் இந்த மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளன. விக்டோரியாவில் என் டி. பியும் மற்றிரு தொகுதிகளிலும் கன்சர்வேடிவ் கட்சியும் வெற்றி பெறுமென எதிர்வு கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# நடுகல்

29

அவள் ஒரு மறக்குடிப் பிறந்த பெண். களம் சென்று பகைவரொடு பொருது, வீரம் விளைவிப்பதுவே அவள் சார்ந்த குலத்தின் தொழில். செறிந்த வீரம் கொண்ட மறக்குலத்தான் ஒருவனை மணம் செய்து வாழ்ந்து வந்தாள்.

தன் குலத்தே பிறந்து பெருவீரம் நிலைநாட்டி அழியாப் புகழ் பெற்ற முன்னோர் ஒருவரது நடுகல்லை இப் பெண் நாள்தோறும் வழிபட்டு வந்தாள்.

இவள் வேறு தெய்வங்களை வழிபடுவதில்லை. இனங்காக்கப் போர்செய்து உயிர் நீத்த உயர்ந்தோரை வணங்குவதே இவளது வழிபாடு.

அவள் காலத்தே போர்கள் சற்றே ஓய்ந்திருந்தன. தினவெடுத்த போர்வீரர் களம் இன்றி வாளாவிருந்தனர். வீட்டுக்கு வருகின்ற விருந்தினர் வருகையும் குறைவாக இருந்தது. இப்பெண் அறம் சான்ற இல்லறத்தாள் ஆதலின், இவை துயர் தருபனவாக இருந்தன.

வாடிய மனத்தோடு, நடுகல் வழிபாட்டிற்குச் சென்றாள். உளம்நெகிழ நடுகல் வழிபாட்டை நடத்தினாள். என் இல்லத்திற்கு, நாள்தோறும் விருந்தினர் தவறாது வருதல் வேண்டும். களங்கள் பலவும் சென்று என் கணவன் பல வெற்றிகள் பெற வேண்டும். வலியாக போர் செய்யவல்ல பகை வேந்தரும் உண்டாக வேண்டும் என நடுகல் வழிபாட்டின் போது இப் பெண் வேண்டிக்கொண்டாள்.

களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
ஓ...வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே.

(புறம் 306)

மறக்குடி பிறந்த இப்பெண்ணின் வியத்தகு வேண்டுதல் நன்முல்லையார் எனும் புலவரை ஈர்க்கவே இப்பாடலைப் பாடினார்.

வீரத்தை வாழ்வின் உரமாகக் கொண்ட சங்க காலத் தமிழர் ஆரிய வழிபாட்டு முறைகளுக்கு ஆட்படாது, இயற்கை வழிபாடுகளிலும், நடுகல் வழிபாடுகளிலுமே ஈடுபாடு கொண்டிருந்தனர். நிலத்தையும் இனத்தையும் காக்க உயிர்நீத்த பெருவீரரே போற்றுதற்குரிய தெய்வங்களாகக் கருதப்பட்டனர்.

வேங்கைப் பூவும், கரந்தைப்பூவும் கடுகற்களுக்குச் சூட்டப்பட்டன. நாள்தோறும் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. நடுகல் அல்லாது பாறையொன்றிலே பல வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்க, அந்தப்பாறையை மஞ்சள் நீரால் கழுவி, கரந்தைப் பூக்களைத் தூவி மக்கள் வழிபட்டிருக்கின்றனர்.

அணியாகச் சென்று போரிட்டு உயிர்நீத்த வீரரின் பெயர்களாக அவை இருக்கக்கூடும். அகநானூறு எனும் இலக்கியத்தில் இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தே தனித்து நடுகல் நட்டு வழிபடுகின்ற வழக்கமும் இருந்தது. பல நடுகற்களை ஒரேயிடத்தில் நட்டு வேல்களையும் சூலங்களையும் அவற்றிடையே ஊன்றி, போர்க்களத்தின் வீரர் அணிவகுத்து நிற்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினர். அந்த நடுகற்களில் வீரர்களின் பெயர்களும், அவர்களின் பெருமையும் எழுதப்பட்டிருந்தன.

நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகல்"

(அகம் 337)

"நல்லமர்க்கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் ழெுதி அதர்தோறும்
பீலிசூட்டியபிறங்குநிலைநடுகல்"

(அகம் 67)

கி பி மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியம் வெட்சித்திணையில் நடுகல் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆகவே நடுகல் வழிபாடு தமிழர் வாழ்வோடு ஒன்றிய தொன்றுதொட்டு நிலவி வந்த வழிபாட்டு முறையாகும்.

தமிழகத்தின் பல கிராமங்களில் இன்றும் இந்த வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஈழவிடுதலைப் போரின் பின் நடுகல் வழிபாட்டுமுறை மீளெழுச்சி கொண்டுள்ளது.

கண்ணும் மண்ணும் நனைகின்ற கார்த்திகைக் காலங்களில் நடுகற்கள் உலகெங்கும் தமிழர்களால் வழிபடப்படுகின்றன.

---

உங்கள் இருப்புக்குள்
ஈழவிடுதலைத் தீ!
தீயவை எவையும் தீண்டா!
உங்கள் எல்லைகளில் கருகும்
களைகளும் கல்லறைகளும்!
எவனும் வருவானோ
கார்த்திகை விழிநீருக்கு விலைபேச!
இருள் கவிந்து உலகம்
இருண்ட போதும்
உங்கள் உள்ளொளியில்
எம் தலைமுறைகள் உயிர்க்கும்!
உங்களுக்காக என்றும்
எங்கள் கார்த்திகை,
வழமைபோல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## சூரன்போருக்கும் வரும்; திருவெம்பாவைக்கும் வரலாம்

சமூகங்களின் முக்கிய வைபவங்கள், கொண்டாட்டங்களுக்கு அரசியல் தலைவர்கள் பொதுவான வாழ்த்துக் கூறுவது ஒன்றும் புதிதல்ல.

தமிழர்களைப் பொறுத்தளவில் தீபாவளி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, கிறிஸ்மஸ் வைபவங்களுக்கு இப்படியான வாழ்த்துச் செய்திகளை அரசியல்வாதிகள் ஊடகங்கள் வழியாக தெரிவிப்பது வழக்கம்.

ஆனால் கடந்த வாரம் கனடாவின் ஒரு அரசியல் கட்சி தமிழ் மக்களுக்கு நவராத்திரி வாழ்த்துக் கூறியிருப்பதைப் படித்த போது (அதுவும் நவராத்திரி முடிந்த இரு நாட்களின் பின்னர்) தலையைச் சுற்றியது.

இந்த நிலைமை தொடருமானால், சூரன் போருக்கும், கந்தர்சஷ்டிக்கும் திருவெம்பாவைக்கும்கூட இனிமேல் வாழ்த்துச் செய்தி வந்தாலும் ஆச்சரியப்படவேண்டி வராது!

தேர்தலுக்கான வாக்குகளை இலக்கு வைத்து வரும் இப்படியான அர்த்தமற்ற வாழ்த்துகளால் தமிழரின் மானம் கப்பலேறுவது தடுக்க.......

பூனைக்கு மணி கட்டுவது யார்?

## ஓடி மறையும் சாமியாருக்கு கனடாவில் ஒரு 'பிறஸ் மீட்'

கடந்த மாதம் 9ஆம் திகதி இரவு 9 மணிக்குப் பின்னர் ஒரு பெண்மணியின் தொலைபேசி அழைப்பு வந்தது. மறுநாள் காலை ஒரு 'பிறஸ் மீற்" என்று கூறி, வருமாறு அழைப்பு விடுத்தார்.

என்ன விடயம் என்று கேட்டால், 'நித்தியானந்த சாமியார் தொடர்பான கூட்டம்' என்றார். "அவரைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது. எல்லாம்தான் பேப்பர்களில் வருகின்றனவே" என்றேன்.

அம்மையாருக்குக் கோபம் வந்து விட்டது. "விரைவில் உங்களுக்கு அவரைத் தெரியவரும்" எனச் சாபமிடும் பாணியில் சொல்லிவிட்டு பேச்சைத் துண்டித்துவிட்டார். அவர் சொன்னதுபோல அந்த (ஆ)சாமி பற்றிய எல்லாமே இப்போ 'அம்பலம்'. அதனால் அவர் தலைமறைவாகி ஓடிக்கொண்டிருக்கிறார்.

## அடிக்கடி கலர் மாற்றும் உண்ணாவிரதத் தாத்தா

தமிழகத்தின் தாத்தா வயது இவருக்கு. அடுத்த வருடம் 90வது பிறந்த நாள். ஆனாலும் அடிக்கடி 'ஸ்டன்ட்' அடிப்பார்.

கடந்த மாதம் ஜெயலலிதாவுடன் ஏற்பட்ட சர்ச்சையால் இனி எல்லாமே கறுப்புத்தான் என்று கூறிவிட்டு, கறுப்புக்கு மாறினார். சட்டை, சால்வை எல்லாம் கறுப்பாகியது. இது இரண்டு நாட்கள்தான்.

வீட்டில் மனைவி (துணைவி அல்ல) கலர் மாறியதை ஏற்கவில்லை ஆதனால் மீண்டும் வெள்ளைச் சட்டைக்கும் மஞ்சள் துண்டுக்கும் மாறி விட்டார்.

கலர் மாற்றுவது தாத்தாவுக்குப் பெரிய வேலையல்ல - உண்ணாவிரதத்தை மூன்று மணித்தியாலத்தில் முடிப்பது போன்றது!

ஜுனியர் விகடனில் ஒரு வாசகர், "ஐயா காவிக்கு மாறுவது எப்போது?" என்று கேட்டு எழுதியுள்ளார்.

## பேச்சு மட்டும் எழுப்பம்; மற்றப்படி காதிலை பூதான்!

அவர் ஒரு வீடு விற்பனை முகவரல்ல. ஆனால் அவரது விளம்பரத்தைப் பார்த்தால் அப்படித்தான் தெரியும். அவரது தொழிலோ வேறு.

இங்குள்ள தமிழ் வானொலியொன்றில் அடிக்கடி வந்து அதன் முக்கிய விளம்பர-காரர் என்றும், அதன் வருடாந்த விழாவின் 'ஸ்பொன்சர்' செய்பவர் என்றும் தம்மை அறிமுகம் செய்து விளாசித் தள்ளுவார்.

2010ல் இந்த வானொலி நடத்திய வருடாந்த விழாவுக்கான ஸ்பொன்சர் பணம் 'முப்பது நூறு டாலர்'களையே இவர் இன்னமும் கொடுக்கவில்லையாம்.

அண்மையில் அந்த வானொலியின் 'மன்னன்' எனப்படுபவர், இவர் ஏதோ பேசிக்கொண்டிருக்கையில் திடுதிப்பென லைனை வெட்டி, ஆளைக் கழற்றி விட்டாராம். காரணம் என்னவோ?

**உதாசனன் உலா விருந்து**

## 'நாகதஅ' நாற்றம் மூக்கை அவிக்கிறது!

நாடுகடந்த தமிழீழ அரசுக்குள் இடம்பெறும் கழுத்தறுப்புகள் இப்போது இணையத்தளங்களுக்கு நல்ல தீனி. நேற்று அந்தப் பக்கம் இருந்தவர், இன்று எந்தப் பக்கம் என்று கண்டு பிடிப்பது கஷ்டமாகவுள்ளது.

உள்நாட்டு மந்தி(ரி) வேலை பறிக்கப்பட்டவர் நிகழ்த்திய சண்டமாருத உரை இணையமொன்றில் அப்படியே வந்துள்ளது. நான்கு காதுகள் போதாது கேட்பதற்கு. பொன்னருக்கு ஓரே சரமாரி!

காசுக்குப் பொறுப்பானவர் கணக்கு விடுகிறாராம். வன்னிக்குக் கப்பல் விட்டவர் வாய் திறக்க மறுக்கிறாராம்.

முன்னாள் துணைப்பிரதமரும் சும்மா இருக்கவில்லை. உருத்திர பாணியில் அறிக்கைப் போட்டி நடத்துகிறார்!

மாவீரர் நாள் தொடர்பாக நடைபெற்ற 'கன்பரன்ஸ் கோல்' கூட்டத்தில் பங்குபற்றிய ஒருவர் அனைத்தையும் அம்பலப்படுத்தி வருகிறார்.

நாடகங்கள் நன்றாகத்தான் நடக்கின்றன.

## யமலோகம் போனவர் சைக்கிளில் வந்திறங்கினார்!

கொலை செய்யப்பட்ட 41 வயது கார் கழுவும் தொளிலாழி ஹில்போர்டோவின் மரணச் சடங்கு அவரது வீட்டில் நடை பெற்றுக் கொண்டிருக்கையில்.......அவர் திடீரென அங்கு சைக்கிளில் வந்திறங்கினார்.

நடந்தது என்னவென்றால், சரியாக இவர் போலவே தோற்றம் கொண்ட இன்னொருவரின் சடலத்தைத் தவறுதலாக உறவினர்கள் வீட்டுக்குக் கொண்டு வந்து இறுதிச் சடங்கை நடத்தியதுதான்.

தனது மகன் உயிருடன் வந்ததைக் கண்ட சிலர் மயக்கமடைந்து விழுந்ததாக O GLOBO செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார் அவரது தாயார்.

இச்சம்பவம் கடந்த மாதம் 20ம் திகதி பிரேசிலில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# நீரிழிவு
## தவறான எண்ணங்கள்

நீரிழிவு பற்றிய தவறான எண்ணங்கள் நிறையவே எம்மிடம் உண்டு. அவற்றை அறிவது முக்கியம்.

தவறான எண்ணங்கள்
நீரிழிவு நோயின் அறிகுறிகள் பற்றி பலரும் தவறான கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. எனக்குப் புண்கள் விரைவாக ஆறிவிடுகின்றது, எனக்குத் தண்ணீர் விடாய் இல்லை, எனக்கு அடிக்கடி சிறுநீர் போவதில்லை, எனக்குத் தலைச்சுற்றுக் கிடையாது, எனக்கு களைப்புக் கிடையாது. எனவே எனக்கு நீரிழிவு இருக்காது எனப் பலரும் தாமாகவே முடிவு கட்டுகின்றனர். இது தவறான கருத்தாகும். நீரிழிவின் ஆரம்ப நிலையில் பெரும்பாலனவர்களுக்கு எந்த அறிகுறிகளும் இருப்பதில்லை.

ஆனால் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிவதற்கிடையிலேயே இருதயம், இரத்தக் குழாய்கள், நரம்புகள், மூளை போன்றவற்றில் தாக்கங்கள் ஆரம்பித்து விடுகின்றன. இவற்றினால்தான் பிற்காலத்தில் பக்கவாதம், மாரடைப்பு, கால் விறைப்பு, சிறுநீரகம் பழுதடைதல், மாறாத கால் புண்கள், கால்களை சத்திர சிகிச்சை மூலம் அகற்றல் போன்ற பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

மறைந்திருக்கும் நோய்
இந் நோயின் மிக ஆபத்தான அம்சம் என்னவெனில் மிகப் பெருந்தொகையான மக்கள் தமக்கு நீரிழிவு இருப்பதை அறியாமல் இருக்கிறார்கள் என்பதுதான். சுமார் 50 சதவிகிதமானவர்கள் தமக்கு நீரிழிவு இருப்பதை அறியால் இருக்கிறார்கள் எனக் கணிப்பீடுகள் கூறுகின்றன. மிகத் தாமதமாக, அதுவும் தமக்கு அந் நோயின் பின் விளைவுகள் வந்த பின்னரே பெரும்பாலானவர்கள் தம்நோயைக் கண்டறிகின்றனர். இதற்குக் காரணம் நீரிழிவு நோய் பற்றிய மேற்கூறிய தவறான எண்ணங்களே. எனவே அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியும்வரை காத்திருப்பது மூடத்தனமானதாகும்.

இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமே நீரிழிவு நோயை ஆரம்ப நிலையில் கண்டறிய முடியும். பலவிதமான இரத்தப் பரிசோதனைகள் உள்ளன. மருத்துவரின் ஆலோசனையுடன் தமக்கேற்றதைச் செய்து கொள்ளலாம். சிறுநீர்ப் பரிசோதனை செய்வது இந்நோயைக் கண்டறிவதற்கான நம்பிக்கையான முறையல்ல என்பதால் பெரும்பாலும் செய்யப்படுவதில்லை.

யாருக்கு இரத்தப் பரிசோதனை அவசியம்
மருத்துவர்கள் வேறு நோய்களுக்காக அவரிடம் செல்லும் போதும் பிரஸரை அளந்து பார்க்கிறார்கள். அதே போல தமக்கு சந்தேகம் உள்ள பலரையும் சீனிக்கான இரத்தப் பரிசோதனை செய்யும்படி வேண்டுகின்றனர். இவ்வாறு இரத்தத்தில் சீனிப் பரிசோதனை செய்வது பல காரணங்களுக்காக இருக்கக் கூடும்.

மருத்துவரிடம் செல்லாதபோதும், உங்கள் இரத்தத்தில் சீனியின் அளவு சரியாக இருக்கிறதா, அதிகரித்திருக்கிறதா என அறியப் பரிசோதனை செய்ய வேண்டும் முக்கியமாக கீழ்க் கண்டுள்ளவர்கள் குருதியில் தமது சீனியின் அளவைச் செய்தறிவது அவசியமாகும்.

பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கட்டாயம் செய்ய வேண்டும். கொழுத்த உடல்வாகு உள்ளவர்களும் கட்டாயம் செய்ய வேண்டும். எடையானது உயரத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இதை உடற் திணிவு அலகு என்று குறிப்பிடுவார்கள். ஆங்கிலத்தில் Body Mass index (BMI) ஆகும். இது இலங்கை போன்ற தெற்காசிய நாட்டவர்களுக்கு 23ற்குள் இருக்க வேண்டும். 25 மேற்பட்டவர்கள் செய்து கொள்வது விரும்பத்தக்கது.

தொந்தியான வயிறுள்ளவர்களும் செய்ய வேண்டும். தமது குடும்பத்தில் நீரிழிவு உள்ளவர்கள். பெற்றோர், சகோதரர்கள் போன்றவரிடையே நீரிழிவு உள்ளவர்களுக்கு அது வருவதற்கான சாத்தியம் அதிகம். உடல் உழைப்பற்ற, வாழ்க்கை முறையுள்ளவர்கள். எனவே அவர்களுக்கும் அவசியமாகும்.
உலகளாவிய ரீதியில் பாதிப்பு அதிகமுள்ள நோய். இன்றைய கால கட்டத்தில் நீரிழிவு நோயின் பாதிப்பு மிக அதிகமாக இருப்பது மாத்திரமின்றி வேகமாக அதிகரித்தும் வருகிறது. உலகளாவிய ரீதியில் 350 மில்லியன் மக்கள் இந்நோயால் பீடிக்கபட்டிருக்கின்றனர். இந்நோயின் பாதிப்பால் மரணத்துக்கு ஆளாபவர்கள் தொகை பயமுறுத்துவதாக இருக்கிறது. 2004 ஆம் ஆண்டு கிடைத்த தகவல்களின் பிரகாரம் சுமார் 3.5 மில்லியன் மக்கள் இந்நோயின் தாக்கத்தால் மரணத்தைத் தழுவினர். 8 வருடங்கள் கழிந்த நிலையில் இன்று அது இரு மடங்காக அதிகரித்து இருக்கலாம்.

**நீரிழிவு ஏன் அதிகமானவர்களைப் பாதிக்கிறது**
போதிய உடலுழைப்பில் ஈடுபட முடியாமல் இருப்பதும், தவறான உணவு முறைகளும்,
கடைகளில் விற்கும் திடீர் உணவுகளை (Fast Foods) அதிகளவில் உண்பதும் முக்கிய காரணங்களாகும். எண்ணெயில் பொரித்ததும், அதிகளவு மாச்சத்து, இனிப்புச் சத்து, உப்பு ஆகியன கொண்ட அத்தகைய குப்பை உணவுகளாவன நீரிழிவு நோயை மட்டுமின்றி கொலஸ்டரோல்,
பிரஷர், பக்கவாதம், மாரடைப்பு போன்ற இருதய நோய்கள், சிறுநீரக செயலிழப்பு, புற்றுநோய்
போன்ற பலவற்றையும் கொண்டு வருகின்றன என்பதை நாம் உணர வேண்டும். இன்று கிராமப்புற மக்களின் உணவு முறைகளிலும் இத்தகைய தவறான உணவுப் பழக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் அவர்களிலும் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியம் அதிகரிக்கிறது. எனவே ஆரோக்கியமான வாழ்க்கை முறையை யாவரும் கடைப்பிடிப்பது அவசியம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# பணியும் மணியும்!

யாழ்ப்பாணக் குடாநாடு இந்திய இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த கால கட்டம் அது' தங்கள் அமைதிப் போர்வையை உதறி விட்டு தங்கள் ஆயுதங்களால் யாழ்ப்பாணத்து உயிர்களை அவர்கள் குறி பார்த்த நேரம்' காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு இரண்டு இந்திய இராணுவப் பெருவண்டிகள் சென்று கொண்டிருக்கின்றன பிரதான வீதி ஒன்றில்' ஆனால் அவை இரண்டும் போராளிகளின் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்காகி விடுகின்றன.

இப்படி ஆகிவிட்டதே என்ற கவலையில் இராணுவத்தினர் இருக்க எப்படி இது நடந்தது என்று ஆச்சரியப்பட்டார் தளபதி மட்டும்' இரண்டு வண்டிகள் தான் வருகின்றன என்று தெரிந்து கொண்டு எப்படிக் கண்ணிகளை அவசரமாகப் புதைத்தார்கள்? என்ற கேள்வி அவரை உறங்க விடவில்லை'
இப்படியான தாக்குதல்கள் நடந்துவிடக் கூடாது என்பதற்காகவே அந்த வீதியில் தாராளமான பொதுமக்கள் போக்குவரத்தையும் அனுமதித்திருந்தார் அவர்' பொதுமக்கள் வாகனங்களுக்கு இழப்பு ஏற்பட்டுவிடும் என்று பயந்தாவது போராளிகள் எதுவும் செய்ய மாட்டார்கள் என்று அவர் எண்ணி இருந்ததற்கு மாறாக பொதுமக்கள் வாகனங்களைத் தவிர்த்து தங்களை இலக்கு வைத்துவிட்டனர் போராளிகள் என்பது அவருக்கு வியப்பாக இருந்தது'

மறுநாள் இரண்டு வாகனங்கள் நான்கு ஆக்கப்பட்டன. அவற்றின் முன்னே பஸ் வண்டி ஒன்று முதியவர்கள் பெண்கள் குழந்தைகளோடு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது' போராளிகளின் தொலைத் தொடர்புகள் எல்லாம் இடை மறிக்கப்பட்டது. வீதிகள் எல்லாம் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டது' விலங்குகளின் கழுத்தில் ஏதாவது செய்திகள் கட்டிக் கடத்தப் படுகின்றதா என்றும் நோக்கப் பட்டது. அப்படி எந்தப் பரிவர்த்தனையும் இல்லை' பிரயாணம் தொடங்கியது'

முன்னே வந்த பஸ் வண்டி மட்டும் கவனமாகத் தப்ப வைக்கப்பட்டுப் பின்னே வந்த நான்கு வாகனங்களும் தூக்கி எறியப்படுகின்றன' உடனே பெருந்தொகைப் போராளிகள் தோன்றி ஆயுதப் பிரயோகம் செய்கிறார்கள்' எத்தனையோ கள முனைகளைக் கண்ட இராணுவத்துக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை' என்ன நடக்கின்றது என்றும் தெரியவில்லை' மேஜர்கள் பலர் போராடாமலேயே மடிந்து போய்விடுகிறார்கள்'

ஒன்றும் விளங்கவில்லை' தோற்றது பிரச்சனை அல்ல' ஆனால் போராளிகள் எப்படி தெரிந்தது கொண்டார்கள் நான்கு வண்டிகள் மட்டுமே வருகின்றன என்பதை? தேவைக்கு ஏற்றபடி நான்கு வெடிகளை மட்டும் எப்படிப் புதைத்தார்கள்' அவர்கள் ஒன்று கூடப் புதைத்திருந்தாலும் அதிர்வினால் அதுவும் வெடித்திருக்கும்' அப்படி இல்லாமல் நான்கினை மட்டும் துல்லியமாகப் புதைத்தது எப்படி? என்ன நடக்கிறது இந்த நாட்டிலே?

முகாமிலே யாரும் உறங்கவில்லை' எப்படித் தகவல்களைப் போராளிகள் பெற்றுக் கொள்கிறார்கள்?
அதற்கான விடையைத் தெரிந்து கொள்ளாமல் பாதுகாப்பாக பயணம் செய்வது என்பது முடியாத காரியம்' என்று முடிவெடுத்து மறுவாரமும் பிரயாணம் ஒழுங்கு செய்யப் படுகின்றது. மூன்று வண்டிகள்' முதல் வண்டியில் தானும் ஏறிக் கொள்கிறார் இராணுவத் தளபதி. வண்டிகள் நகர்கின்றன. எல்லோர் மனத்திலும் மரண பீதி' யாழ்ப்பாண நகரைச் சென்றடைவது அல்ல அவர்களின் இலக்கு. உண்மையைக் கண்டறிந்து விடவெண்டும் என்று துடித்தார்கள்'

வழியில் அந்த விநாயகர் கோவிலைத் தளபதி வணங்கிக் கொள்கிறார்' வாகனத் தொடரணி கோவிலைக் கடந்ததும் கோவில் மணி மூன்று தடவைகள் அடித்து ஓய்கின்றது. தற்செயலாக ஓசையை எண்ணிய தளபதி எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது' வாகனங்களை நிறுத்துங்கள் என்று கத்தினார்' வண்டியை விட்டு இறங்கி நேராக மணிக்கூட்டுக் கோபுரத்துக்குச் செல்கின்றார்' கூடவே இந்தியச் சிப்பாய்கள்'

அங்கே ஒரு முதியவர் மணியை அடித்துவிட்டுச் சிரமப்பட்டுப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்' மெலிந்த தேகம்' தள்ளாடும் நடை' கையிலே ஒரு ஊன்று தடி' நெற்றியிலே திருநீறு' செயலுக்குத் தகுந்த ஒரு தவக் கோலம்'
பெரியவர் நீங்கள் தானே மணி அடித்தீர்கள்?
ஆம் ஐயா' நான்தான் அடித்தேன்'
ஏன் மூன்று தடவைகளுடன் நிறுத்தி விட்டீர்கள்? ஏன் தொடர்ந்து அடிக்கவில்லை?
அடிக்கலாம் என்றுதான் நினைத்தேன்' ஆனால் உடம்பு முடியவில்லை' இயலாமல் இருக்கின்றது' மிகவும் சிரமப்பட்டு மூன்று முறை மட்டும் அடித்தேன்' ஆண்டவனுக்கு அது போதும்' அவனுக்கு எல்லாம் தெரியும்'
அது தான் போன வாரம் இரண்டு முறையும் நான்கு முறையும் அடித்தீர்களா? தளபதி கேட்டார். முதியவர் பதில் பேசாது நின்றார்' தளபதியின் கண்கள் சிவந்தன'
பையன்களும் பொண்ணுகளும் தான் போராளிகள் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டோம் இல்லையா? சரி. பரவாயில்லை' எங்கள் கூட வாருங்கள்' போகலாம்'

வாகனத் தொடரைத் திரும்பச் செய்து முகாமை அடைந்தார் தளபதி' அன்று யாழ் நகருக்குச் செல்லவில்லை' அதனால் பல இராணுவத்தினர் காப்பாற்றப்பட்டனர்.

இந்திய இராணுவத் தளபதியாக இருந்த ஒருவர் எழுதிய யாழ்ப்பாணத்தில் நான் என்ற நூலில் இந்த உருக்கமான செய்தி யாழ்ப்பாணத்தின் விடுதலைப் பற்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றது' இந்த மணி விவகாரத்தை நாம் தெரிந்து கொண்டபோது அனுபவம் வாய்ந்த பல வீரர்களை எமது தரப்பில் வீணாக இழந்திருந்தோம் என்று கவலையுடன் குறிப்பிடுவார் அந்தத் தளபதி' தமது நூலில்'

(28ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# வேலையிடத்தில் உருவாகும் நட்பு

இது கொஞ்சம் கலவரம் தரும் விடயம் தான்.

இதைப்பற்றி அலசுவது பல்வேறு வாதப் பிரதிவாதங்களையும் உருவாக்கலாம் என்பது புரிந்துகொள்ளக்கூடிய விடயமாக இருந்தாலும், சமூக சீர்திருத்தம் என்று வரும்போது, யாராவது இதைச் சொல்லியே ஆக வேண்டுமென்ற நிலையில், இதை நாம் உங்கள் கவனத்திற்கு வைக்கிறோம்.

வேலையிடத்தில் உருவாகும் நட்பு என்று தலைப்பிட்டாலும், வேலையிடம் தவிர, சொந்தக் குடும்ப உறுப்பினரல்லாத அந்நிய இடங்களில் உருவாகும் நட்பு என்று இந்தத் தலைப்பை, சற்றே விரிவாக்கிக் கொண்டாலும் தப்பில்லை என்றே தெரிகிறது.

குடும்ப ஒழுக்கம் என்ற அளவுகோலுக்குள் சற்று அளவுக்கதிகமான சட்டதிட்டங்களை உள்ளடக்கி, பெண்களை இயன்றவரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வகையில் அமைக்கப்பட்டதே நம்ம ஊர் சட்ட திட்டங்கள் என்பது அனைவரும் அறிந்ததுதான்.

அதிலும் குறிப்பாக, ஆண்கள் எத்தகைய தவறான காரியங்களில் ஈடுபட்டாலும் அதைத் தட்டிக்கேட்க எந்த சட்டங்களும் அமைத்துவிடக்கூடாது என்பதுடன், அதேபோன்று பெண்கள் ஈடுபடும் பட்சத்தில் அதை உச்சக்கட்ட அழுத்தங்களுடன் தவிர்த்துவிடுவதற்கு ஏதுவான சட்டங்களை சற்று அளவுக்கதிகமாகவே உருவாக்கிவிடத் துடித்தது எமது சமூகம். அதில் கணிசமான வெற்றியையும் கண்டது எமது சமூகம் என்பது துயரமான உண்மை.

இதை உடைத்து, பெண்களுக்கும் சமஉரிமை வழங்கிவிடலாம் என்று விடுதலைப் புலிகள் அமைப்பு அதீத முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், அதன் மௌனிப்பின் பின்னர், பெண்கள் உரிமை என்பது மீண்டும் அங்கே கேள்விக் குறியாகவே மாறியிருக்கிறது.

சரி, எமது மண்ணை விட்டு விடலாம், நாம் வாழும் கனடிய மண்ணை எடுத்துக்கொண்டால், இங்கு ஒன்றும் பெரிதாக பெண்ணுரிமை வாழ்வதாக எடுத்துக்கொள்ள முடியாதிருப்பது பெரிதும் துயரமான உண்மை. ஆனால், இத்தகைய பெண் அடிமைத்தனம் என்பது, பெரிதும் ஆண்களது அடாவடித்தனத்துக்கு எதிராகவே பயணிக்கிறது என்பதை, பல ஆண்களும் அனுமானித்து சுதாகரித்துக்கொண்டு செயற்பாட்டில் இறங்கத் தவறுவது பரிதாபத்திற்குரியது.

இந்த மேற்குலகம், இரு நபர்களுக்கிடையிலான உறவை, உச்சக்கட்ட சுதந்திரத்துடனேயே பார்க்கிறது. இரு நபர்களும், விரும்பினால் வாழலாம், விரும்பினால் உறவாடலாம், விரும்பும்போது விலகிக்கொள்ளலாம், அத்துடன், விரும்பிய அனைவருடனும் விரும்பியவாறு உறவாடலாம் என்று, சற்று அளவுக்கதிகமான சுதந்திரத்துடன், சற்று இடக்கரடக்கலான வாய்ப்பு வசதிகளை உருவாக்கியவாறே பயணிக்கிறது.

இத்தகைய சமஉரிமையும் சமத்துவமும் உண்மையில் வரவேற்கத்தக்க விடயங்களே. எனினும், இப்படி திடீரெனக் கிடைத்திருக்கும் நேர்எதிர் சமஉரிமையையும் சுதந்திரத்தையும், வரம்புமீறிப் பயன்படுத்தினாலும் கேட்பதற்கு ஆளில்லை என்ற எண்ணத்துடன், தங்கள் நட்பு வட்டத்தையும் தொழில் புரியும் இடங்களில் கிடைக்கும் தோழமையையும், சற்று அளவுக்கதிகமான நெருக்கத்துடன் உறவாட எடுக்கும் முயற்சிகள், எம்மவரிடையே அதிகரித்து வருவதாகப் பலரும் கருத்துக் கூறுகிறார்கள்.

இதில் ஆண்கள் அல்லது பெண்கள் என்ற ஒரு பகுதியினர்தான் அதிகமாக இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லமுடியாத அளவிற்கு, இரு தரப்பினருமே இப்படி தங்கள் நட்பு வட்டங்களை அளவுக்கதிகமாக விரிவுபடுத்தி, மனைவி அல்லது கணவன், குழந்தைகள் என்ற முதற்கட்ட உறவு வளையத்தின் கண்ணியத்தில் கறையேற்படுத்தி விடுகிறார்கள்.

இது தொடர ஆரம்பித்து, இறுதியில் குடும்ப வாழ்வில் பல்வேறு விரிசல்களையும் உருவாக்குவதுடன், மன உளைச்சல், மனநோய், மது அல்லது போதைக்கு அடிமையாதல் போன்ற நிரந்தரப் பிரச்சனைகளை உருவாக்கி விடுகின்றன. அத்துடன், தங்கள் சொந்தக் குழந்தைகளின் அமைதியையும், கல்வி, ஆற்றல், மனவிருத்தி போன்றவற்றையும் நிரந்தரமாக இத்தகைய பிரச்சனைகள் தாக்கி வலிதான காயங்களை உருவாக்கி விடுகின்றது.

ஒரு பக்கத்தில் தாயும் தந்தையும் மணமுறிவு விவகாரத்தில் இழுபட்டுக்கொண்டு, சண்டையும் குழப்பமும் விரக்தியுமென அலைந்து திரிவதுடன், சட்டத்தரணி, நீதிமன்றம், மனநோய் வைத்தியர் என்று அலைந்து திரிய, பிள்ளைகள் செய்வதறியாது திகைக்கிறார்கள். பல்வேறு

பாதிப்புக்களுக்கும் அவசியமின்றி முகம்கொடுக்கும் பிள்ளைகள், இறுதியில் கல்வியிலும் தொழிலிலும் சொந்த வாழ்விலும் தோல்வியடைந்தோராய் தங்களையே தொலைத்து விடும் நிலைக்குத் தள்ளப்படுவதால், தமது அற்ப ஆசாபாசங்களுக்காக, தங்கள் சொந்தச் செல்வங்களையே பலி கொடுத்து விடுகிறார்கள் நம் பெற்றோர்.

தற்காலிக அற்ப சொற்ப ஆசைகள் தேவைகளுக்காக, எமது சமூக விழுமியங்களை, வாழ்வியலை, மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருக்கும் குடும்ப வாழ்வை, குழந்தைகளின் எதிர்காலத்தை, இன்னும் சொல்லப்போனால், குடும்ப அங்கத்தினரதும் ஏனைய நெருங்கிய குடும்ப உறவுகளினதும் நற்பெயரையும் சமூக மதிப்பையும் சமுதாய நற்பண்புகளையும் ஒட்டுமொத்தமாய்க் குழிதோண்டிப் புதைக்கும் வகையில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியமானது.

இதனை நாம் சிந்திப்பது அவசியம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# நேரமில்லையா?

இதைப் பிரித்து எழுதுங்கால் நேரம் + இல்லையென அமையும். உலகத்தார் பாவனையில் இப்பிரயோகம் இயற்கை. வேறோர் வாய்ப்பாட்டாற் சொல்லும்போது எங்கை நேரம் என்றும் கூறுவர். நேரமில்லையென்பது வெளிப்படை. நேரம் எங்கேயென்றால் நேரமில்லை என்பது நேரம் இல்லையென்பதாகப் பொருள்படும்.

ஆங்கிலத்திலும் பார்க்க No time எனப் பேசப்படுகிறது. இந்த அவசரமான உலகிலே "அண்ணன் ஏதெடா தம்பியேதெடா" எனப் பாடப்பட்டிருக்கிறது யாவரும் அறிந்ததே. காலம் பெறுமதியானது எனவே காலம் பொன்னானது என அதற்கு மதிப்புக் கொடுக்கப்படும். எனவே நேரத்தை வீணடிக்கக் கூடாது அன்றோ. ஒவ்வொரு மணித்துளிகளும் பெறுமானம் ஆனவையே. ஜேர்மனியிலே மிக மிக முக்கியத்துவம் நேரத்துக்குக் கொடுப்பர்.

இந்த இயந்திர உலகிலே மிக லாவகமாக, நாசூக்காக நேரமில்லையெனக் காலத்தை உதாசீனம் செய்கின்றனர். காலம் கறங்கு போன்றதெனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பாடியுள்ளார். கீழது மேலதாகும், மேலது கீழதாகும். இன்றைய கவிஞர் ஒருவர் "காலமெனும் சிற்பி செய்யும் கவிதைத்தாய் கோயிலெடா" எனப் பாடியுள்ளார். எண்ணங்களுக்கோ கணக்கில்லை. மகாகவி பாரதிகூட "சென்றது இனி மீளாது, மூடரே சென்றதையே சிந்தை செய்து, கொன்றழிக்கும் குழியில் வீழ்ந்து குமையாதீர், இன்று புதிதாய்ப் பிறந்தோமென்றும் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்று மகிழ்ந்து விளையாடி மகிழ்வீர்" என இடித்துச் சொல்லியிருக்கிறார். இப்பொன்வரிகளை நெஞ்சத் தடத்திற் பதித்து வைப்போமாக.

காலங்களைத் தொல்காப்பியனார் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென வகுத்தார். முடிந்தது இறந்தகாலம். நடந்து கொண்டிருப்பது நிகழ்காலம். இனிமேல் நடக்கப் போவது எதிர்காலம். இடைநிலை கொண்டு காலம் கணிக்கப்படும். வந்தான் இறந்தகாலம். வருகின்றான் நிகழ்காலம், வருவான் எதிர்காலம். வேதாந்திகள் நிகழ்காலமே நிச்சயமானது என வாதிடுவர். சுகி சிவமவர்கள் உடைந்த பானை இறந்தகாலம், மதில்மேற் பூனை எதிர்காலம், வாசிக்கும் வீணை நிகழ்காலமென எழுதியுள்ளார். இறந்த காலமின்றி எப்படி எதிர்காலம் வருமென்பது சைவசமயிகளின் கோட்பாடு. கண்ணதாசன் "காலமும் ஒரு நாள் மாறும், கவலைகள் யாவும் தீரு"மெனப் பாடியுள்ளார். வாழ்நாள் பூராவும் சோக நாடகம் கண்டவர்களுமுண்டு. எவர் எவ்வாறெழுதினும் காலத்தின் கோலம் நம்மை எல்லாம் ஆட்டியசைக்கிறது, வாட்டி வதைக்கின்றது அன்றோ.

காலம் செய்யும் காரியத்தை வேறேதும் செய்ய முடியாது. காலம் ஒருவனை எழுப்பினும் எழுப்பும், வீழ்த்தினும் வீழ்த்தும். காலக் கணக்கர் பஞ்சாங்கம் வகுத்தனர். நாள் திதி நட்சத்திரம் யோகம் கரணம் பஞ்சாங்க அம்சங்கள். அரேபியா, பாரசீகம், சீனா போன்ற தேசங்களிலே பஞ்சாங்கம் உருவானது. ஆலயங்கள், அர்ச்சகர்கள், சோதிடர் இவற்றை நடைமுறைப்படுத்தினர். இன்று கிறித்தவ புத்தாண்டையும் நம்மவர் புகுத்துகின்றனர். கிறித்தவ சமயமே காரணமாம். வாழையடி வாழையெனவந்த கோட்பாடுகள் நம் பழைய சோதிடப் பதிவுகள். பிள்ளைகளின் பெயர்களையே மாற்றுகின்றனர். நம் புத்தாண்டு சித்திரை முதற் தேதியேதான். பஞ்சாங்கம்போல இப்போ கலண்டர்கள் உருவாகியுள்ளன. இறைவனின் தெய்வீகக் கோலங்களை நாட்காட்டிகளிலே அச்சடித்து விற்பதோ, இலவசமாகக் கொடுப்பதோ பாதகச் செயலாகும்.

இந்த வரிசையிலே சதுர்யுகங்கள் எழுந்தன. கிரேத, திரேத, துவாபர, கலியுகம் நான்கு யுகங்கள். திரேதாயுகம் சத்திய யுகமாம். பாரதியும் இது பற்றிப் பாடியுள்ளார். காலதேச வர்த்தமானங்கள் எம்மை மாற்றக்கூடாது. கலியுகத்தை வைத்துக் கொண்டு பல மாற்றங்களைப் புகுத்துவது பொருத்தமா? கலியை மாற்ற முடியாதா. கண்டதே காட்சி கொண்டதே கோலமென அநீதிகள் மலிகின்றன. எனவே நாம் தர்மம் தவறாமல் நீதி வழுவாமல் வாழ வேண்டுமன்றோ? இன்றைய விஞ்ஞான காலத்தில் உலகம் மிகமிக நெருங்கிவிட்டதால் எங்கும் எதிலும் ஒரு அச்சம் கொண்டு புகுத்தப்படுகிறது. கம்பியூட்டர் யுகத்தை வைத்துக் கொண்டு புதிய உலகமொன்று சிருஷ்டிக்கப்பட்டுவிட்டது அன்றோ? நேரம் பாழடிக்கப்படுகின்றது, வீணடிக்கப்படுகின்றது. சில எடுத்துக்காட்டுகளை உன்னிப்பாய்க் கவனிப்போம். இரத்தினச் சுருக்கமாகப் பார்ப்போம்.

கணினி கம்பியூட்டர் வந்து வெப் சைட், ஈமெயில் போன்ற பல கணினித் தொழிற்பாடுகளால் மனித சமுதாயம் மிகவும் கெட்டுவிட்டது. மிகப் பின்னடைவு பெற்றுள்ளமை யாவருமறிந்த உண்மை. அரசியற் குழப்பங்கள், ஒழுக்கக் கேடுகள், நிதானம் இன்மை, நீதியொழிப்பு, தகாத பழக்கவழக்கம், நச்சுவாயுப் பரம்பல், பாலியல் உறவுக் கெடுபிடி, கசினோ வரையான சூதாட்டங்கள், அரசியற் பகடையென்று பல துறைசார்ந்த சமுதாய அழிப்புகள் இலகுவாய் பரம்புகின்றன. இவற்றின் சாதகபாதகங்களை உலகத்தின் ஒவ்வொரு பிரஜையும் கூர்ந்து பார்த்து புதிய உலகத்தை சிருஷ்டிப்பதோடு பழுதான மக்கட் பண்பை மாற்றியமைக்கவும் ஒரு தாமதமின்றி உடனே விழி தமிழா!

மனச்சான்றுள்ள ஒவ்வொரு மனிதனும் மனுஷியும் எம் நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து எமக்கு நேரம் இல்லையா, இருக்கா எனத் தீர்மானிக்க வேண்டும். நிறைய நேரம் இருக்கு நாம்தான் வாழ்நாளை வீணடிக்கிறோமென உணர்வோமாக! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் தேசிய அவை நிகழ்வுகள்

## ஒரு கோடி கையெழுத்து



தமிழீழ மக்களுற்கான அரசியல் தீர்வை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், சுயாதீன உலக போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தியும் கையெழுத்து இயக்கம் ஸ்காபரோ சிவிக் செண்டரில், ஒக்டோபர் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பெற்றது. புலம்பெயர் நாடுகளிலுள்ள மக்கள் அவைகள் இதனை மக்கள் பணியாக கையேற்று செயற்படுத்துகின்றன.

பெருமளவு தமிழர் வாழும் கனடா நாட்டில் வாழும் நாம், அதிகூடிய கையெழுத்துகள் சேகரிக்கும் கடமையுடையவர்கள். எங்கள் மண்ணுக்காக உயிரைத் தியாகம் புரிந்தவர்களுக்கு நாம் செய்யவேண்டிய தலையாய பணி இது. உங்கள் கையெழுத்து, உங்கள் குடும்பத்தினர் கையெழுத்து, உங்கள் உறவினர் - அயலவர் - நண்பர்களின் கையெழுத்துகள் மட்டுமன்றி, இன மதங்களுக்கு அப்பாற்பட்டதாக உங்களுக்கு அறிமுகமான, உங்களுடன் பணிபுரிகின்ற ஒவ்வொருவரின் கையெழுத்தையும் இதற்காகப் பெறுங்கள் என்று உங்களை உரிமையுடன் கனடிய தமிழர் பேரவை வேண்டுகின்றது.

ஒன்று பத்தாகி பத்துகள் நூறாகி நூறுகள் ஆயிரமாகி ஆயிரங்கள் லட்சங்களாகி ஒரு கோடியாக எட்டட்டும்'
தொடர்புகளுக்கு: தொலைபேசி: 416-830-7703
மின்னஞ்சல்: info@ncctcanada.ca
இணையத்தளம்: www.ncctcanada.ca



## ஆடலரங்கம் - 2012

கனடிய தமிழர் தேசிய அவையின் 'ஆடலரங்கம் - 2012' கடந்த மாதம் 13ஆம் திகதி ரொறன்ரோ ஆர்மீனிய மண்டபத்தில் நடைபெற்றது. பத்து வரையிலான நடன மன்றங்களின் நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெற்றது (ஒளிப்படங்கள்: குணா - செய்தி.கொம்)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனின் அகவை அறுபது விழா



குரும்பசிட்டியின் பெயரை உலகளாவிய ரீதியில் மதிப்புற வைத்த பிரபல எழுத்தாளரும் தாய்மண் உணர்வாளரும் செயற்பாட்டாளருமான எஸ். ஜெகதீஸ்வரனின் (ஜெகா) அகவை அறுபது பூர்த்தி மணி விழா கடந்த மாதம் எட்டாம் திகதி ஸ்காபரோ பாபா விருந்துபசார மண்டபத்தில் நடைபெற்றது. விழாக்குழுத் தலைவர் திரு. எஸ். இராசநாயகம் ஆசியுரை வழங்கி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். வாழ்த்துரைகள், சிறப்புரைகள், பாராட்டுரைகள் என மூன்று அரங்காக விழா நடைபெற்றது. ஸ்காபரோ றூஜ்றிவர் நகரசபை, மாகாண சபை மற்றும் நாடாளுன்ற பிரதிநிதிகள் நேரடியாகப் பங்கேற்று வாழ்த்துப் பத்திரங்களை வழங்கி சிறப்புச் செய்தனர். 'ஜெகஜீவிதம்'.என்ற பெயர் பூண்ட மணிவிழா மலரை அதன் ஆசிரியர் 'இளவாலை' எஸ். ஜெகதீசன் வெளியிட்டு உரை நிகழ்த்திய பின்னர், அதன் முதற் பிரதியை மணிவிழா நாயகனின் தாயார் திருமதி ஐயாத்துரையிடம் வழங்கினார். மூத்த எழுத்தாளர் குறமகளின் சிற்றுரை விழாவுக்கு மெருகூட்டியது. திரு. ஜெகதீஸ்வரனின் ஏற்புரையைத் தொடர்ந்து இரவுப் போசனத்துடன் விழா முடிவடைந்தது.


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹனுஜா - ரம்யா சகோதரிகள் அரங்கேற்றம்



பிரபல விளையாட்டு வர்ணனையாளரும், உதைபந்தாட்ட நடுவருமான எஸ். கணேஷ் - தயா தம்பதிகளின் புதல்விகளான ஹனுஜா-ரம்யா சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த மாதம் 7ஆம் திகதி மார்க்கம் தியேட்டர் அரங்கில் இடம்பெற்றது. ரொறன்ரோ கலாபவனம் ஆசிரியர் நாட்டியக் கலைமணி குமுதினி சிறீகாந்தனின் மாணவிகளான இவர்களின் அரங்கேற்றத்துக்கு கனடாவின் முன்னணிக் கலைஞர்கள் வாத்திய இசை வழங்கி அரங்கைச் சிறப்பித்தனர். நிகழ்வின் சில ஒளிப்படங்கள் இங்கு இடம்பெற்றுள்ளது.





# செல்வன் பிருந்தனுக்கு கனடிய ஆளுனரின் தீரத்துக்கான விருது

செல்வன் பிருந்தன் முரளிதரனை இலகுவாக மறக்க முடியாது. 2006ஆம் டிசம்பர் மாதம் பத்தாம் திகதி, பனி படர்ந்த குளிர்கால மூட்டத்தில் நண்பனை கிஷோபனைக் காப்பதற்காக குளத்தில் கால்பதித்த வேளையில் அதற்குள் மூழ்கித் தன்னுயிரைத் தியாகம் செய்த பதினொரு வயதுச் சிறுவன் இவன். கனடிய ஊடகங்களால் 'Little Hero' என்று வர்ணிக்கப்பட்ட பிருந்தனின் தீரத்தைப் பாராட்டி 2008ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் ரொறன்ரோ நகரசபை ஸ்காபரோ றூஜ்றிவரிலுள்ள பூங்காவொன்றுக்கு பிருந்தனின் பெயரைச் சூட்டி நிலையான பெருமை சேர்த்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். பிருந்தனின் மறைவின் ஆறு வருடங்களின் பின்னர் அவனது அர்ப்பணிப்பை வியந்து கனடிய ஆளுனர் (கவர்னர் ஜெனரல்) தீரத்துக்கான விருது வழங்கிய நிகழ்வு கடந்த மாதம் 12ஆம் திகதி ஒட்டாவாவிலுள்ள 'றிடோ' (Rideau) வாசஸ்தலத்தில் நடைபெற்றது. வருடாவருடம் கனடாவில் வீர, தீர, தியாக சேவைகளைப் புரிந்தவர்களுக்கு ஆளுனரின் விருது வழங்கிக் கௌரவம் செய்யப்படுவது வழக்கம். இவ்வருடம் மொத்தம் நாற்பது பேருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இவர்களில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட பிருந்தனுக்குரிய 'மறைவுக்குப் பின்னரான' விருதை அவரின் பெற்றோரான நடராஜா முரளிதரனும், சத்தியசிறியும் ஆளுனரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். தமிழ்ச் சிறுவனொருவனுக்கு இவ்வாறான ஆளுனர் விருது கனடாவில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

# கனடா 'தமிழ் மிறர்' பத்திரிகையின் ஒன்றுகூடல்

கனடாவிலிருந்து வெளிவரும் 'தமிழ் மிறர்' பத்திரிகையின் இரவு விருந்துடன் இணைந்த ஒன்றுகூடல் கடந்த மாதம் 19ஆம் திகதி ஸ்காபரோ கொன்வென்ஷன் அரங்கில் இடம்பெற்றது. பி.பி.சி வானொலியின் இலங்கை நிருபராகக் கடமையாற்றிய பிரான்செஸ் ஹரிசன், ஐரோப்பிய பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் றொபர்ட் இவான்ஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு உரையாற்றினர். பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவிருந்த கனடிய குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி கலந்து கொள்ளாததால் அவரின் வாழ்த்துச் செய்தி அவரது பிரதிநிதியால் பத்திரிகையின் ஆசிரியர் சார்ள்ஸ் தேவசகாயத்திடம் கையளிக்கப்பட்டது. மேற்படி பத்திரிகையால் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டது.







...படங்கள்;
...தி' குணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொந்தமான ஒரு வீடு,
## உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

வீடு விற்பனைத்துறையில் முகவராக அடியெடுத்து வைக்கும் நான் உங்களுக்குப் பணி புரியக் காத்திருக்கிறேன்

# வீடு வாங்க விற்க



-digi-

## ஈசன் குலசேகரம்
Sales Representative



RE/MAX
**Vision Realty Inc.**
Brokerage*
*Independently owned and operated

Dir: **416.835.1700**
2210 Markham Road, Suite 1, Toronto ON M1B 5V6
Office: **416.321.2228**
Fax: 416.321.0002
e-mail: info@esanhomes.com, web: www.esanhomes.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# தமிழ் இலக்கியப் பரப்பே பரந்ததும் விரிந்ததும் ஆகும் 60

தமிழில் உள்ள இலக்கியங்களின் பரப்பு எண்ணாலும் எண்ணத்தாலும் அளப்பரியது. சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையில் 2,329 அடி உள்ளன. பத்துப்பாட்டின் அடியளவு 3,548 ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் 5,632 பாடல்கள் உண்டு.

மேற்கூறிய மேல்கணக்கு கீழ்க்கணக்கு நீங்கலாக தமிழில் அய்ம்பெரும் காப்பியங்கள், அய்ஞ்சிறு காப்பியங்கள் என பத்துக் காப்பியங்கள் உண்டு. இவற்றில் சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் என்ற புகழுக்கு உரியது.

பல்லவர் காலத்தில் (ஏழாம் நூற்றாண்டு) சமண - பவுத்த மதங்களைப் புறங்கண்டு பக்தி இயக்கம் தலைதூக்கியது. அதனைத் தொடக்கியவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோர். பக்தி இலக்கியத்தால் தமிழ்மொழி புதுப் பொலிவுற்று பண்ணொடு கலந்து இசை மணம் பரப்பின.

சோழப்பேரரசன் இராசராசன் (கிபி 985 - 1014) வேண்டுகோளுக்கு இணங்க நம்பியாண்டார் நம்பி (11 ஆம் நூற்றாண்டு) என்ற சைவப் பெரியார் அவற்றைத் தொகுத்து பதினொரு திருமுறைகளாக வெளியிட்டார். பின்னர் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தையும் சேர்த்து பன்னிரு திருமுறைகள் என வழங்கலாயினர்.

சம்பந்தர் (1,2,3 திருமுறைகள்) 16,000 பதிகங்கள் பாடியதாக நம்பியாண்டார் நம்பி கூறுகிறார். ஆனால் இன்று 384 பதிகங்கள் 4,181 பாடல்களே கிடைத்துள்ளன. முதல் திருமுறையில் நட்டபாடை (22) தக்கராகம் (24) பழந்தக்கராகம் (16) தக்கேசி (12) குறிஞ்சி (29) வியாழக் குறிஞ்சி (25) மேகராகக் குறிஞ்சி (8) ஆகிய ஏழு பண்களில் 136 திருப்பதிகங்கள் அமைந்துள்ளன. இவற்றின் பாடல் எண்ணிக்கை 1469.

இசை கீழான உணர்வுகளைத் தூண்டும் என்று சமணர் கருதினர். 'இசை இறைவன்பால் இட்டுச் செல்லும்' என்பது சம்பந்தரது கருத்தாகும். அவர் செந்தமிழைப் பேணுவதைப் பெரிதும் விரும்பினார். தமிழ் இலக்கியத்தில் இவரது பங்களிப்பு மிகவும் உயர்வானது.

அப்பர் 4,900 (4,5,6 திருமுறைகள்) பாடல்கள் பாடியதாக சுந்தரர் சொல்கிறார். ஆனால் 312 பதிகங்களும் 3,066 பாடல்களே இன்று கிடைத்துள்ளது. இவர் பாடிய பாவகைகளில, 'தாண்டகம்' என்ற பாடல்வகை குறிக்கத்தக்கது. இதனால் இவரைத் தாண்டக வேந்தர் என்று பாராட்டுவர். இவரது திருத்தாண்டகம் போல் தமிழ் இலக்கியத்தில் வேறு எங்கும் காண முடியாது என்பர். "பாவுற்றலர் செந்தமிழ்ப் பதிகத் தொடை பாடிய பான்மையினால் நாவுக்கரசு என்று உலகு ஏழினும் நின் நல்நாமம் நயப்புற மன்னுக" என்று இறைவன் இவருக்கு வழங்கினான் என்று பெரிய புராணம் (செய்யுள் 1344) குறிப்பிடுகிறது. சம்பந்தர் இட்டபெயர் 'அப்பர்' என்பதாகும்.

சுந்தரர் (7 ஆம் திருமுறை) இயற்றிய திருத்தொண்டை தொகையில் 63 நாயன்மார்களது குறிப்புகள் காணப்படுகின்றன. இவர் பாடிய 3800 பதிகங்களின் எண்ணிக்கை 38,000 பாடல்களாகும். ஆனால் இன்று கிடைத்திருப்பது 100 பதிகங்கள் 1026 பாடல்கள் மட்டுமே. இவர் பாடிய முதல் பாடல் பித்தா பிறைசூடீ எனத்தொடங்கும் பாடல், இறுதிப் பாடல் ஊழிதோறு ஊழிமுற்றும் எனத்தொடங்கும் பாடல்.
இதுவரை கிடைத்துள்ள தேவாரத் திருப்பதிகங்களின் (பதிகம் 10 - 11 பாடல்கள் கொண்டது) மொத்த எண்ணிக்கை 796 ஆகும். பாடல்களின் எண்ணிக்கை 8250 ஆகும்.

மாணிக்கவாசகர் (8 ஆம் திருமுறை) இதில் 76 பதிகங்கள் 1,056 பாடல்கள் உண்டு. இதில் 51 பிரிவுகளும் தேனூறும் திருவாசகம் 656 ம் இடம்பெற்றுள்ளன. திருக்கோவையார் 25 அதிகாரங்களையும் 400 பாடல்களையும் உடையது.
மாணிக்கவாசகரது முதல் பாடல் நமச்சிவாய எனத்தொடங்கும் பாடல். இறுதிப் பாடல் செம்மை நலம் அறியாத எனத்தொடங்கும் பாடல்.
திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வர் இல்லாவிட்டால் பக்தி இலக்கியம் இல்லை என்றே சொல்லிவிடலாம்.

ஒன்பதாம் திருமுறையில் ஒன்பதின்மர் பாடிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்தப் பாடல்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என வழங்குவர். திருவிசைப்பாவில் 28 பதிகங்களும் திருப்பல்லாண்டில் 1 பதிகமும் உண்டு. பாடல் தொகை 365 என்று குறிப்பிடப்படினும் கிடைத்தவை 301 பாடல்கள்தான். முதல் 8 திருமுறைகளும் இசைப்பாக்கள் ஆயினும் இத்திருமுறை ஒன்றுக்கே திருவிசைப்பா என்ற பெயர் அமைந்திருப்பது இதன் சிறப்பை உணர்த்துகிறது. சாளர பாணி என்ற பண் இதில் மட்டுமே காணப்படுகிறது. பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, நட்டராகம், இந்தளம் முதலான பண்கள் ஏனையவை.

திருமூலர் (பத்தாம் திருமுறை) எழுதிய திருமந்திரத்துக்கு இன்னொரு பெயர் மந்திரம் மூவாயிரம். தமிழில் எழுந்த முதல் தத்துவ நூல் இதுவே. பதிகங்கள் 1,237, பாடல்கள் 3,000. பதினோராந் திருமுறை பன்னிருவர் பாடியது. மொத்த பதிகங்கள் 40 பாடல்கள் 1,419. காரைக்கால் அம்மையார், பட்டினத்து அடிகள் பாடியிருக்கிறார்கள்.

சேக்கிழார் (பன்னிரண்டாம் திருமுறை) பாடிய பெரிய புராணத்தில் 13 சருக்கம், 71 புராணங்கள், 4272 பாடல்கள் காணப்படுகின்றன.

பன்னிரு திருமுறையில் 1,254 தலைப்புகள் 18,246 பாடல்கள் இடம்பெற்றுள்ளன'
இவை மட்டுமல்லாது 14 சைவ சிந்தாந்த சாத்திரங்கள், சித்தர் பாடல்கள், திருப்புகழ் என அனைத்தும் சைவ இலக்கியங்கள் ஆகும். இவற்றோடு தமிழில் உள்ள பவுத்தம், சமணம், ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம், கிறித்துவம் ஆகிய சமய இலக்கியங்களைவும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கிபி 700 - 900 வரை சைவ சமயத்துக்கு இணையாக தமிழ்நாட்டில் வைணவ பக்தி இயக்கம் வலுப்பெற்று விளங்கியது. திருமால் வழிபாடு தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் போன்றவை சங்க இலக்கியங்களில் பாராட்டப்பெற்றுள்ளது. கிபி 6 - 9 ஆம் நூற்றாண்டுக்குள் வாழ்ந்த பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய பாடல்களை 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனி நாலாயிரத்திவ்விய பிரபந்தம் எனத் தொகுத்தார். திவ்வியம் என்பது அடியவர்களுக்கு இன்பம் அளிப்பது என்ற பொருளில் இனிமை என்னும் பொருளைத் தரும். 'பிரபந்தம்' என்பது 'தொகுப்பு' என்றும் 'தனி நூல்' என்றும் பொருள் தரும். இதில் முதலாயிரம் (947 பாடல்கள்) பெரிய திருமொழி (1134 பாடல்கள்) திருவாய்மொழி (1102 பாடல்கள்) இயற்பா (817 பாடல்கள்) என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தேவாரத்தில் காணப்படாத எளிமையும் இனிமையும் நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் காணப்படுகிறது.

மேலும் வைணவக் கோயில்களில் பெருமான் அருகில் அமர்ந்து நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் பாராயணம் செய்யும் வழக்கமுண்டு. திருமால் வீதி வலம் வரும்போது திவ்வியப் பிரபந்தம் அவருக்கு முன்னால் பல்லக்கில் எடுத்துச் செல்லப்படுகிறது. இது வைணவ சமயம் தமிழுக்குக் கொடுத்துள்ள முன்னுரிமையாகும். இவ்வுரிமையை இன்றளவும் சைவக் கோயில்களில் திருமுறைகள் ஓதுவதற்குப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் கடவுள் சிவன் அருகில் சமஸ்கிருத மந்திரங்களை உச்சரிப்பதும் தமிழர்களாகிய ஓதுவார்கள் தொலைவில் குறிப்பிட்ட இடத்துக்கப்பால் நின்று திருமுறைப் பாடல்கள் இசைப்பதும் மரபாக இருந்து வருகிறது. தமிழகத்தில் "தென்னாடுடைய சிவன்" கோயிலில் தமிழிசை முழங்கும் உரிமையைச் சைவ வழிபாட்டினர் பெறவில்லையா? அல்லது பெற்றிருந்த உரிமையை இழந்துவிட்டார்களா?

இந்த இலக்கிய வளம் காரணமாகவே அய்யன்னாவால் ஒப்புக்கொள்ளப்பட்ட 6 செம்மொழிகளில் தமிழும் ஒன்றாகும். ஏனையவை சீனம், ஹீப்ரு, கிரேக்கம், சமற்கிருதம், இலத்தீன் ஆகும்.

உலக மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிக்கை, காலப் பழமை, யாப்பியல், இசை வடிவங்கள் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பே பரந்ததும் விரிந்ததும் ஆகும். தமிழில் கடைச்சங்க காலம் முதற் கொண்டு 20 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தோற்றம் கொண்ட பல்வேறு வகையான இலக்கியப் பரப்பில், அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சமய இலங்கியங்களாகும். அதனால், தமிழில் காணப்படும் சமய இலக்கியங்களின் பரப்புப் போன்று வேறு மொழிகளில் இல்லை என்கிறார்கள்.

எது எப்படியிருப்பினும் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாழ்நாள் போதாது. பல பிறவிகள் எடுத்தால்தான் முடியும் போல் தெரிகிறது. படிப்பது இருக்கட்டும் இந்த தமிழ் இலக்கியங்கள் பற்றித் தெரிந்திருப்பவர்கள் எத்தனை பேர்?

(வளரும்)




பா(f)ன்ஸி பூக்கடை

Fancy Florist

பூஜைக் களஞ்சியம்



**Fancy Florist International Inc.**

**An International Flower Shop**

*We deliver Garlands, jasmine and gifts anywhere in the world on the date you select when placing orders through our three on-line Flower Shops.*

**To send jasmine, garlands and gifts Anywhere in Canada**
**Place the order on line at Flower shop**
**www. fancyflorist.ca**
**Phone: (416)288-1419**
***In Canada, the local pick up is at***
**5633 Finch Ave, East, Unit # 6, Scarborough, Ont. M1B 5K9**

**To send jasmine, garlands and gifts Anywhere in USA**
**Place the order on line at Flower shop**
**www. fancyflorist.com**
**Phone: (716) 838-0844**
***In USA, the local pick up is at***
**2119, Eggert Road Amherst, NY, 14226**

**To send jasmine, garlands and gifts Europe, Middle East, India, Sri Lanka Singapore, Malaysia**
**Place the order on line at Flower shop**
**www.fancyflorist.in**
**Phone: (716) 838-0844**
***In India, the local pick up is at***
**12 Ghandhi St, BT Nagar, Gerugambakkam, Chennai**

*Place the order in any one of our three on-line Flower Shops to send temple garlands to your favorite temple in Canada, USA, India, Sri Lanka, Singapore and Malaysia*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என். செல்வராசா (நூலகவியலாளர்)

# ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின் எழுந்த குரல்கள் - 3

Sri Lanka Killing Fields
ஆவணப்படத்தைத் தழுவி சிறீலங்காவின் கொலைக்களம்: பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலையும் இன அழிப்பும் என்ற தலைப்பில் மலேசியத் தமிழரான கா.ஆறுமுகம் என்பவரால் ஒரு நூல் வெளியிடப்பட்டது. முகிலன், பூங்குழலி வீரன், சாமி. மூர்த்தி, வெ.முத்து, சி.ம.இளந்தமிழ், தி.பிரசன்னா ஆகியோர் தொகுப்பாளர்களாக இயங்கி இந்நூலை வெளிக்கொண்டுவந்தனர். கோலாலம்பூரில் இயங்கும் செம்பருத்தி அமைப்பினர் கடந்த பெப்ரவரி 2012இல் இந்நூலை வெளியிட்டிருந்தனர். இந்நூல் மலேசிய மண்ணிலிருந்து செம்பருத்தி அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ளது. சிறிலங்காவுக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறீலங்கா அரசுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்கும் நாடுகளின் பட்டியலில் மலேசியாவும் இடம் - பெற்றிருந்த நிலையில், மலேசிய அரசைத் தனது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யும்படி வலியுறுத்தும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டு - ள்ளது. கொலைகாரனுக்கு உடந்தை-யாக, ஏன் இந்தக் கொலைவெறி? இனவாத சிங்கள அரசும், தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும், சிறீலங்காவின் கொலைக்களம், போர்க்குற்ற அறிக்கை: சுருக்கக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் ஏராளமான கறுப்பு-வெள்ளை புகைப்படங்களுடனான தரவுகளைக் கொண்டிருந்தது. 18சதவீதம் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி-யிருந்த மலேசியா வாக்கெடுப்பில் சிறீ லங்கா அரசுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துவந்த நிலையில், ஐ.நா. வாக்கெடுப்பின்போது, மனம் மாறி நடுநிலைமை வகிக்கத் திர்மானித்த-மைக்கு செம்பருத்தி அமைப்பினரின் இந்நூல் வெளியீடுசார்ந்த பாரிய முன்னெடுப்பும் ஒரு காரணமாகியது.


மலேசிய மண்ணில் இக்காலகட்டத்தில் வெளிவந்த மற்றொரு நூலும் ஈழத்தமிழர்கள் தொடர்பானது. விடிந்தது ஈழம்: வரலாற்றுப் பதிவு என்ற நூல் கொலாலங்கட் அ.ரெங்கசாமி அவர்களால் எழுதப்பட்டது. மலேசிய மண்ணின் பிரபல வரலாற்று நாவலா - சிரியராகக் கருதப்படுபவர் ரெங்கசாமி. சிலாங்கூர் மாநிலத்தில் கோலலங்காட் என்ற இடத்தில் பிறந்தவர். ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரான இவர் 1950 முதல் ஓயாமல் எழுதி வரும் மலேசியப் படைப்பாளி. இவரது புதியதோர் உலகம், நினைவுச்சின்னம், லங்காட் நதிக்கரை, இமயத் தியாகம், ஆகிய நாவல்கள் மலேசிய வரலாற்றின் பல்வேறு கூறுகளை இலக்கியமாக்கியவை. மலேசியா, செம்பருத்தி பதிப்பகத்தின் மற்றுமொரு ஈழம்சார்ந்த வெளியீடாக விடிந்தது ஈழம் வெளிவந்துள்ளது. இந்நூல் மலேசியத் தமிழருக்கு ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு குறித்து மிக எளிய அறிமுகத்தைக் கொடுக்கின்றது. வரலாற்றுடன் மலேசியப் படைப்பிலக்கியவாதி அ.ரெங்கசாமி அவர்கள் விடுதலைப் புலிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் கைக்கொண்ட நிலைப்பாடுகள்மீது தனது கருத்தினையும் பதிவு செய்கிறார். தனது கருத்துக்களைக் கட்டமைப்பதற்கு (அன்டன் பாலசிங்கத்தின்) போரும் சமாதானமும், உண்மையின் தரிசனம் இணையத்தளம், (ஐ.தி.சம்பந்தனின்) கறுப்பு ஜுலை 1983 குற்றச்சாட்டு ஆகிய நூல்களையும் பல்வேறு பத்திரிகைச் செய்திகளையும் ஆதாரமாகப் பயன்படுத்தியுள்ளார். இந்நூல் ஈழத்தமிழர்பால் மலேசியத்தமிழரின் அண்மைக்கால அனுதாப அலைக்கு பின்னணித் தகவல்களை வழங்கக்கூடும்.

இலங்கையில் நடந்தேறிய நாலாம் கட்டப் போரின் சோக முடிவுக்குக் காரணமான-வர்களை போர்க்குற்றவாளிகளாகப் பிரகடனம் செய்யும் அரசியல் முன்னெடுப்புகள் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரும்வகையில் 2009இலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இந்தியா-இலங்கை போரும் குற்றமும்: ஒரு பன்னாட்டுப் பார்வை என்ற நூல் இத்தகைய முன்னெடுப்புகளின் நன்மை-தீமைகளை அலசுவதாக அமைந்துள்ளது. தமிழகத்தவரான பவா சமத்துவன் என்பவரால் எழுதப்பட்டு, அவர் சார்ந்துள்ள சென்னை இந்திய சமூக நீதி ஊடக மையத்தின் வெளியீடாக நவம்பர் 2010இல் வெளியிடப்பட்டது.

இந்திய சமூக நீதி ஊடகமைய வெளியீட்டுத்தொடரில் இரண்டாவது வெளியீடாக வெளிவந்த நூல் இதுவாகும். இலங்கையில் நடந்த விடுதலைப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந்திய அரசுடன் இணைந்து இலங்கை அரசு எடுத்த இறுதிக்கட்ட நடவடிக்கை வடபுலத்தை கொலைக்களமாக்கியது. இந்நிலைமையை சர்வதேச ஊடகங்கள் எவ்வாறு காட்சிப்படுத்தின என்பதை இந்நூல் புகைப்பட ஆதாரங்களுடன் பதிவுசெய்கின்றது. பல்வேறு நேர்காணல்களிலும் செய்திகளிலும் இருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் புகைப்படங்கள் என்பவற்றினூடாக ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலையின் கொடூரத்தை நூலாசிரியர் இந்நூலின் வாயிலாகப் பதிவுசெய்யமுனைந்துள்ளார். சென்னை, இந்திய சமூக நீதி ஊடக மையத்தின் நிறுவனரான பவா சமத்துவன் அவ்வமைப்பின் தலைவருமாவார்.

மார்சுக்கி தாருஸ்மான் (இந்தோனேசியா) அவர்களைக் குழுவின் தலைவராகவும், ஸ்டீவன் ரத்னர் (ஐக்கிய அமெரிக்கக் குடியரசு), யஸ்மின் சூக்கா (தென் ஆபிரிக்கா) ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்டு 22.6.2010 அன்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கிமூன் அவர்களால் நியமிக்கப்பட்ட ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை 31.3.2011இல் நியுயோர்க்கில் வெளியிடப்பட்டது. பின்னர் தமிழக வாசகர்களுக்காக, தமிழகத்தின் அக்னி சுப்பிரமணியம் அவர்களால் இவ்வறிக்கை தமிழாக்கம் செய்யப்பட்டது. போர்க் குற்றவாளி: இலங்கையில் போர்க் குற்றங்கள் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை என்ற பெயரில் அது நூலுருவில் சென்னை மனிதம் வெளியீடாக, 2011இல் புகைப்படங்கள், அட்டவணைகள் சகிதம் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையின் தமிழாக்கம் இந்நூலின் பிரதான பகுதியாக பக்கம் 88-328இல் இடம்பெற்றுள்ளது. இவ்வறிக்கை ஆணை,தொகுப்பு மற்றும் வேலைத்திட்டம்/ மோதலுக்கான வரலாற்று ரீதியிலான அரசியல் பின்னணி/குற்றஞ்சாட்டப்பட்ட .. (28ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

Main Square Dental Office

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**





# Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

**www.computek.edu**

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |


Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

*Chapel Ridge*

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng
Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor

**416-431-3600** Ext:2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..





O Corporate Awards
O Promotional Products
O Laser Engraving
O Pad Printing
O Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!





One stop for all your promotional needs.

PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

*Why think so long...?*




- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements


Homelife/Future
Realty Inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

416- 898 4846

NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# B20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ???

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறு அம்பயர்களை, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) சஸ்பெண்ட் செய்தது. கிரிக்கெட் வீரர்களைப் போல, அம்பயர்களும் பணம் பெற்றுக் கொண்டு பிக்சிங்கில் ஈடுபட்டதை, இந்தியா டிவி புலனாய்வு செய்தியின் மூலம் அம்பலப்படுத்தியது.
பாகிஸ்தானின் நதீம் கவுரி, அனீஸ் சித்திக், வங்கதேசத்தின் நாதிர் ஷா மற்றும் இலங்கையின் காமினி திசநாயகே, மவுரிஸ் வின்ஸ்டன், சாகரா கல்லாகே என, 6 அம்பயர்கள் பிடிபட்டனர்.

இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,), பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் இலங்கை கிரிக்கெட் போர்டுகள் விசாரணை நடத்துகின்றன. இதனிடையே, விசாரணை முடியும் வரை இவர்களை ஐ.சி.சி., சஸ்பெண்ட் செய்தது. இதுகுறித்து ஐ.சி.சி., வெளியிட்ட அறிக்கை: இந்தியா டிவி நடத்திய புலனாய்வில் பணம் பெற்றுக் கொண்டு பிக்சிங் செய்தது அம்பலமானது.

இதையடுத்து சம்பந்தப் பட்ட ஆறு அம்பயர்களும், முழு விசாரணை முடியும் வரை சஸ்பெண்ட் செய்ய ஐ.சி.சி., முடிவு செய்துள்ளது. இடைப்பட்ட காலத்தில் உள்ளூர் அல்லது எந்த சர்வதேச போட்டிகளிலும் இவர்கள் அம்பயர் பொறுப்பேற்க முடியாது. இவர்கள் ஐ.சி.சி., ஒப்பந்த பட்டியலில் இல்லை. அந்தந்த கிரிக்கெட் போர்டுகள் தான் அம்பயர் பணிக்கு அமர்த்தின. இதுகுறித்து உடனடியாக விசாரணை நடத்தப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எதற்கும் தயார்: புலனாய்வு செய்தி குறித்து இந்தியா டிவியின் தலைவர் கூறுகையில், நாங்கள் வெளியிட்ட செய்தி உண்மையானது. வீடியோ குறித்து எவ்வித விசாரணைக்கும் தயாராக உள்ளோம். அம்பயர்கள் இதுபோன்ற கிரிமினல் செயலில் ஈடுபடுவது, கிரிக்கெட்டுக்கு அழகல்ல, என்றார்.
வழக்கு தொடர முடிவு சஸ்பெண்ட் செய்யப்பட்ட பாகிஸ்தான் அம்பயர் நதீம் கவுரி கூறுகையில், இந்தியா டிவி வெளியிட்ட வீடியோ போலியானது. இதை தங்கள் வசதிக்கு ஏற்ப மாற்றியுள்ளனர். இவ்வி'யம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு (பி.சி.பி.,) அதிகாரிகளிடம் தெரிவித்தேன். அவர்கள் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. விசாரணையை முடித்த பின், சம்பந்தப்பட்ட சேனலின் மீது வழக்கு தொடர்வேன், என்றார்.

கிரிக்கெட் சூதாட்டத்தில் அம்பயர்கள் ஈடுபடுவது உண்மை தான். ஐ.பி.எல்., தொடர் துவங்கிய பின் தான், இதுகுறித்து அதிக செய்திகள் வெளிவரத் துவங்கின, என, முன்னாள் அம்பயர் டேரல் ஹேர் தெரிவித்தார்.

பேராசை காரணமாகத் தான் அம்பயர்கள் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். பிக்சிங் செய்யும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்தால், இடையில் பேராசையும் சேர்ந்து கொள்ள, கடைசியில் இப்படி இறங்கி விடுகின்றனர்.

சர்வதேச போட்டிகளில் பங்கேற்பவர்கள், இந்த செயல்களில் ஈடுபட்டதில்லை. உள்ளூர் போட்டிகளின் போது, அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு அம்பயர்கள் பிக்சிங்கிற்கு சம்மதிக்கின்றனர்.
இந்தியாவில் ஐ.பி.எல்., தொடர் துவங்கியதில் இருந்தே, அம்பயர்கள் பிக்சிங் குறித்து வதந்திகள் அதிகம் வெளிவரத் துவங்கின. இவை வெளிவர இத்தனை நாட்கள் ஆனது, மிகவும் வியப்பாக உள்ளது.

சரியாக தெரியாது: நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட்டில் அம்பயராக இருந்த போது, சக ஆஸ்திரேலியர்கள் இந்திய ஐ.பி.எல்., அணிகளுக்கு பயிற்சியாளர்களாக இருந்தனர். ஐ.பி.எல்., தொடரில் நடக்கும் சில வி'யங்களை என்னிடம் தெரிவித்து ஆச்சரியப்படுவர். இதை சரியாக புரிந்து கொள்ள முடியாது. ஏனெனில், அவர்கள் பல்வேறு மொழிகளில் பேசுவர்.

திடீர் தோல்வி: ஐ.பி.எல்., தொடரில் சில போட்டிகளைப் பார்த்தால் நன்றாக சென்று கொண்டிருக்கும். திடீரென பார்த்தால் விக்கெட்டுகள் அப்படியே சரிந்து விழும். எளிதாக வெல்ல வேண்டிய போட்டியில், கடைசியில் அந்த அணி தோற்றிருக்கும்.

நடவடிக்கை வேண்டும்: இதுபோன்ற வி'யங்களில் ஐ.சி.சி., கவனம் செலுத்தி, முழுமையாக தடுக்க முயற்சிக்க வேண்டும். ஆனால், தங்களுக்கு சட்டரீதியிலான அதிகாரம் இல்லை என்று சொல்லி விடுகின்றனர். கிரிக்கெட்டை எவ்வித களங்கமும் இல்லாமல் கொண்டு வர, இவை அனைத்துக்கும் மேலான நிலையில் ஐ.சி.சி., செயல்பட வேண்டும்.இவ்வாறு டேரல் ஹேர் தெரிவித்தார்.
காத்திருக்கிறது பி.சி.சி.ஐ., அம்பயர்கள் பிக்சிங் குறித்து இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ.,) துணைத் தலைவர் ராஜிவ் சுக்லா கூறுகையில், சூதாட்டம் குறித்து செய்திகள் வெளியாகும் போதெல்லாம் பி.சி.சி.ஐ., தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது, அம்பயர்கள் செயல் குறித்து ஐ.சி.சி., சரியான நடவடிக்கை எடுக்கும். விசாரணை முடியும் வரை காத்திருப்போம், என்றார்.

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கேற்றம் செய்த சிரேஷ்ட மாணவர் கௌரவிப்பு

கலைஞர்கள் கௌரவிப்புத் திட்டமொன்றின் கீழ், கனடாவில் அரங்கேற்றம் செய்த சிரேஷ்ட கலைத்துறை மாணவர்களை முதலாவதாகத் தெரிந்து கௌரவிக்க கனடாவிலுள்ள தமிழ்ப் பண்பாட்டு மேம்பாட்டு ஒன்றியம் தீர்மானித்துள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் நவம்பர் 10ஆம் திகதி வரை ஒன்றியத்தால் ஏற்கப்படும். 20 ஆண்டுகால வரையறைக்குட்பட்டு தம்மிடம் கலை பயின்று அரங்கேற்றம் செய்த சிரேஷ்ட மாணவர் ஒருவரை சிபார்சு செய்யுமாறு ஆசிரியர்கள் கோரப்பட்டுள்ளனர். பரிந்துரை செய்யப்படும் மாணவர், இன்று வரையும் கலைத்துறையில் ஈடுபாடுடையவராக இருக்க வேண்டும். தொடர்பு முகவரி: கலாநிதி இ. பாலசுந்தரம், President, Tamil Cultural Progressive Organisation, 1 Greystone walk Drive, # 986, Toronto, M1K 5J3. தொலைபேசி: 416 267 5255.

---

## ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட..

மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கு எல்லை/ குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாகச் சீர்தூக்கிப் பார்த்தல்/ பொறுப்புக்கூறல் பற்றிய இலங்கையின் அணுகுமுறை/ பொறுப்புக்கூறலுக்கான மேலும் தடைகள்/ முடிவுரைகள்/ பரிந்துரைகள் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களின் நாலாம்கட்ட ஈழப்போர் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குவந்த கதையை சொல்வதற்கு வாழும் சாட்சியங்கள் எதுவும் இதுவரை முன்வரவில்லை. சாட்சியங்களே இல்லாது அழிக்கப்பட்ட துயரம் அது. சக்திமிக்க வல்லரசுகளின் சற்றலைட் கமராக்களைத் தவிர வேறு சாட்சியங்கள் எதுவுமே இராதோ என்ற ஏக்க நிலையில், அந்த வரலாற்றைப் பதிவுசெய்யும் வகையிலான இலக்கியங்கள் இன்றளவில் திருப்திகரமாக ஈழத்தில் உருவாகவில்லை. சுயதணிக்கைக்குட்பட்ட இனமாக நாங்கள் நீண்டகாலம் வாழப்பழகிவிட்டோம். அத்தகைய அபாயகரமான தணிக்கை எமது தியாக வரலாற்றின் சாட்சியங்கள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படும்வரை தொடர அனுமதிக்கக்கூடாது. முடிந்தவரை அவை அனைத்தும் ஆக்க இலக்கியங்களுக்கூடாகவோ, கட்டுரைகளின்வழியாகவோ ஆவணப்படுத்தப்படவேண்டும். ஏற்கெனவே எமது சமகால வரலாற்றின் பல்வேறு காலகட்டங்கள் இவ்வாறு இலக்கியங்களினூடாகப் பதிவுசெய்யப்பட்டுவிட்டன. இந்திய அமைதிப்படையின் காலகட்டம், விடுதலைப் போராட்டக் காலகட்டம், பாரிய வலிகாமம் இடப்பெயர்வு, வடபகுதியில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை என்பன இவ்வாறு இலக்கியங்களுள் பொதிக்கப்பெற்றுவிட்டன. அவ்வகையில் எதிர்காலத்தில் பல படைப்புகள் ஈழத்திலிருந்து உருவாக்கப்பட்டு உலகளாவிய தமிழர்களால் பதிக்கப்பெற்று ஆவணப்படுத்தப்பட வேண்டும்.●

---

## பணியும் மணியும்....

ஆம்' எமது நாட்டிலே ஒரு எழுச்சி இயக்கமாகத் தோன்றிய விடுதலை அமைப்புக்கு பெற்ற மக்களை மட்டும் அனுப்பி விட்டுப் பெற்றார்கள் உறங்கி இருக்கவில்லை' தாய் நாட்டுக்காக தம்மால் முடிந்ததை எல்லாம் முதியவர்கள் கூடச் செய்திருக்கிறார்கள்' அவர்களின் பல செயல்களுக்கு விளம்பரம் கிடையாது' இன்று மாவீரர்கள் ஆகிவிட்ட அவர்களை எல்லாம் யாராவது சுட்டிக் காட்டும் போது தான் நாம் தெரிந்து கொள்கிறோம்' அவர்களுக்கும் எம் வணக்கங்களைச் செலுத்த வேண்டியது எம் மாவீரர் நாள் கடமைகளில் ஒன்றாகி விடுகின்றது'

அதே வேளை எங்கள் வாழ்வியலைச் சிதைத்தவர்களாக இருந்தாலும் இத்தகைய வரலாற்றுச் செய்திகளை மறைக்காமல் வெளியிட்டு எங்கள் முன்னோர் வயது வேறுபாடின்றி விடுதலைப் போர் செய்த திறனை எமது மனங்களிலே பதிய வைக்கும் இந்தியத் தளபதி போன்றவர்களும் எம்மால் போற்றப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்' காரணம் எதிரிகளால் ஆவணப் படுத்தப்பட்டாலும் அந்தத் தியாகங்கள் எம் மண்ணுக்கே சொந்தம் அல்லவா?

HERITAGE Education Funds
RESP SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

Graphic Land - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

35 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON

416-412-3838
416-836-5825



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம் 70

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை நாம் பன்ம பொருளாதாரம் (Digital Economy) பற்றிய அறிமுகமும் இம்முக்கியத்துவம் பற்றியதான ஒரு கண்ணோட்டமாக அமைய இருக்கின்றது.

பன்ம பொருளாதாரம் (Digital Economy) என்பது இணைய பொருளாதாரம் (Web Economy) புதிய பொருளாதாரம் (New Economy) வலைத் தொடர்பு பொருளாதாரம், அறிவியல் பொருளாதாரம் (Knowledge Economy) என பல்வேறு பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. இதற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் பல்வேறு வகைப்பட்டதாக இருக்கின்றது. வியாபார நடவடிக்கைகளை வலைத்தொடர்பு (Internet) மூலம் செயல்படுத்தும் பொழுது அதற்கு ஆங்கிலத்தில் e-commerce என அழைக்கின்றார்கள்.

இதேபோன்று ஒருநாட்டின் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் பொருளாதார தரவுகளை அந்தந்த நாடுகளினால் உத்தியோகபூர்வமாக அறிவித்த மறுகணமே உலகில் உள்ள எல்லோரும் அறியும் வகையில் இணைய வசதிகளும் தொலைக்காட்சி வசதிகளும் அமைந்திருப்பது பங்குச் சந்தை (Stock Market) மற்றும் நாணயச் சந்தை (Currency Market) போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்குச் சாதகமாக அமைகின்றது. இது தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றன.

கைத்தொலைபேசி இன்று மனிதனின் அத்தியாவசிய சேவையின் ஒரு பகுதியாக மாறியிருக்கின்றது. குறிப்பாக அப்பிள் நிறுவனத்தின் iphone இளைய தலைமுறையின் கவர்ச்சியான ஒரு கருவியாக மாற்றப்பட்டுள்ளது மாத்திரமல்லாமல் அவர்களுக்கிடையில் ஒரு சமூக அல்லது தனிமனித ஆளுமையை அளவிடும் ஒரு அளவுகோலாகவும் மாறியிருக்கின்றது. இதுவும் பன்ம பொருளாதாரத்தின் ஒரு அங்கம்தான் என்பது முக்கியமாகும் உலகளாவிய ரீதியில் 2009ம் ஆண்டுக்கும் 2010ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 19 மில்லியன் வேலைவாய்ப்புக்களை இது உருவாக்கியுள்ளது. இது 2007-2008 காலப் பகுதியை விட 5 சதவீதம் அதிகரித்ததாகக் கூறப்படுகிறது. இத்தகைய துறைகளில் பல்வேறுவகைப்பட்ட தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டாலும் சில மரபுரீதியான தொழில்வாய்ப்புக்கள் மறைந்துபோகின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

Canada Revenue Agency இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் பல கிளை அலுவலகங்களில் வழங்கிவந்த சேவைகளை நிறுத்தி தொலைபேசிமூலமும் இணையதள மூலமும் சேவைகளை வழங்க முடிவுசெய்திருக்கின்றது. பத்து வருடங்களுக்கு முன்பு வங்கிகள் தமது கிளைகளில் வழங்கிவந்த சேவையில் இன்று பல சேவைகளை இணையமூலம் பெறும் வசதிகள் இருப்பதால் இணையப் பாவனைக்கு பழக்கப்படாத சிலர்தான் எல்லாவகைப்பட்ட தேவைக்கும் வங்கிகளுக்குச் செல்கின்றனர். இதனால் முன்புபோல் நீண்ட வரிசைகளை வங்கிகளில் காண்பது குறைந்துள்ளது.

உயர்கல்வி நிறுவனங்கள் தொலைத்தொடர்புக் கல்வி மூலம் (Online Study) சிலவகைப்பட்ட கற்கை நெறிகளை வீட்டில் இருந்தவாறே கற்கக்கூடிய வசதிகளைத் தருகின்றன. தற்பொழுதுள்ள இந்த பன்ம பொருளாதாரமே இதனை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இன்று வளர்ச்சியடைந்த நாடுகளும், வளர்ச்சியடைந்துவரும் நாடுகளும் இத்தகைய பொருளாதார நடவடிக்கைக்கு அரசுகள் ஊக்கம் கொடுத்து வந்தாலும் ஆசிய, ஆபிரிக்க தென்னமெரிக்க நாடுகளில் உள்ள பெரும்பாலான நாடுகளின் வளர்ச்சி மேற்கத்தைய நாடுகளைப்போல வளர்ச்சியடையவில்லை. இந்த நாடுகள் கல்வித் தரத்தில் பின்தங்கிநிற்பதும் அரசாங்கங்கள் தமது உள்நாட்டு அரசியலில் ஸ்திரத் தன்மை இல்லாது இருப்பதும் அரசியல் மற்றும் தனியார் துறைகளிலும் காணப்படும் லஞ்சம், ஊழல் போன்ற விடயங்கள் காணப்படுவதும் இவர்களின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒருநாட்டு மக்களின் கல்வித் தரம் சிறப்பாகக் காணப்பட்டால் இத்தகைய புதிய பொருளாதார ஒழுங்கு முறையை உள்வாங்கி செயல்படுதவில் சிரமம் இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும்.

இக்கட்டுரை எழுதும் ஒருசில நாட்களுக்கு முன்பு அவுஸ்திரேலிய நாட்டின் பிரதமர் Julia Gillard அவர்கள் சிட்னி நகரத்தில் தொழில் அதிபர்கள் பங்குபற்றிய ஒரு மகாநாட்டில் கூறிய கருத்துக்கள் முக்கியமானவை. தமது நாட்டில் இருக்கும் இயற்கை கனிவளங்களைவிட 21ம் நூற்றாண்டு பொருளாதாரத்தில் அறிவு முக்கியமானது என அவர் கூறியிருந்தார். இரும்பு, செம்பு, தங்கம் போன்ற இன்னும் பல்வேறு வகைப்பட்ட கனிவளங்களைக்கொண்ட அவுஸ்திரேலிய நாட்டின் பிரதமர் கூறிய இக்கருத்து மிகவும் முக்கியமானது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**




**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881


# கனடிய கறுப்பின 'முதல்வர்' லிங்கன் அலெக்சான்டர் 90 வயதில் காலமானார்



கனடிய சமூகத்தில் பன்முகப் பணிகளாலும் பதவிகளாலும் பிரபல்யமான லிங்கன் அலெக்சான்டர் (90) கடந்த மாதம் 19ஆம் திகதி தமது வாழ்விடமான ஹமில்டன் நகரில் காலமானார். கனடிய கறுப்பினத்திலிருந்து முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று தடவை தெரிவாகி முதலாவது கறுப்பின அமைச்சராகவும் விளங்கிய இவர், ஒன்ராறியோ மாகாணத்தின் 24வது லெப்டினன்ட் ஜெனரலாக (1985-1991) பதவி வகித்தவர். அதன் பின்னர் 1991 முதல் 2007 வரை Guelph பல்கலைக் கழகத்தின் வேந்தராகப் பணியாற்றினார். இறுதியில், கனடிய இன ஒற்றுமை நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். Order of Canada, Order of Ontario ஆகிய உயரிய விருதுகள் உட்பட நூறுக்கும் அதிகமான சாதனைப் பட்டயங்களை இவர் பெற்றுள்ளார். தமது முதலாவது மனைவி யுவோன் 1999ல் மரணமானதையடுத்து தம்மிலும் 30 வயது இளையவரான மர்னி என்ற வெள்ளையினப் பெண்ணை மறுமணம் புரிந்திருந்தார். 1997ஆம் ஆண்டு நடைபெற்ற 'தமிழர் தகவல்' ஆறாவது ஆண்டு விருது வழங்கும் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட லிங்கன் அலெக்சான்டர் விழாவில் உரையாற்றுகையில், 'சிறுபான்மை இனங்கள் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்காது அதற்காகப் போராட வேண்டும்' என்று தெரிவித்துடன், கறுப்பினத்தவராகிய தாம் கனடாவில் சந்தித்த சவால்களை முறியடிப்பதில் கையாண்ட முறைகளை விரிவாக எடுத்துக்கூறி கூடியிருந்தோரின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.


**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



**10 டாலரிலிருந்து ஆரம்பித்து 7200 டாலர்கள் வரை கனடா அரசாங்கம் வழங்கும் நன்கொடையைப் பெற்று (20 வீத Grant) உங்கள் பிள்ளைகளதும் பேரப்பிள்ளைகளதும் கல்வி வாய்ப்பை ஊக்குவியுங்கள்.**

**சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற**
**சிவா கணபதிப்பிள்ளை**
**அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலகம்

## Aadalaham Dance Academy

ரொறன்ரோ (டவுண்ரவுண்), ஸ்காபரோ, மார்க்கம் நகரங்களில்
பரதநாட்டிய வகுப்புகள் நடைபெறுகின்றன.



அனோஜினி குமாரதாசன் பி.ஏ.(நடனம்)
அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகம்

**Anojini Kumaradasan** B.A.(Dance)
Annamalai University Canada Campus

Bharathanatyam classes at the following locations:
Toronto (Downtown), Scarborough, Markham

416 968 5975    416 710 5975



டிலனும் ஜோசுவாவும் எப்போதும்
ஒரு முக்கிய துண்டை காணாமல்
தவிப்பார்கள் அவர்களின் அப்பா



டேரல் ரே ஒரு
குடிபோதை சாரதியால்
கொல்லப்பட்டார்

சிவப்புப்
பட்டி
திட்டத்திற்கு
ஆதரவழிப்போம்

madd
Toronto

416 924 2666
info@m ddtoronto.c




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AB LEGAL SERVICES
## Professional Corporation

### Kauvsegan.E
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*

Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**
Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2



SABESAN'S Choice



**தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு**
**சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்**
**யன்னல், கதவு புதுப்பித்தல்**
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**

*Sabesan's Choice*
**416 605 1990**




• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

**JRB Universal Inc.**
Almost All Services Available

647 289 6164

**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]
Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொறன்ரோ நகரிலுள்ள 759 டாக்சி சாரதிகள் பொதுநலப்படியில்?

றொறன்றொ நகரில் டாக்ஸி சாரதிகளுக்கான லைசன்ஸ் வைத்திருக்கும் 759 பேர் பொதுநலப்படி (welfare) பெறுகின்றனரா என்ற கேள்வி எழுந்துள்ளது. கிளப்புகளில் நடனமாடும் பெண்கள், வீதிகளிலும் பாட்டுப் பாடுபவர்கள், டாக்ஸிச் சாரதிகள் என்று நகரத்தின் தொழில் புரியும் லைசன்ஸ் பெற்ற சுமார் 1539 பேர் கடந்த 2010-2011ஆம் ஆண்டுகளில் பொதுநலப்படி பெற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நகர கணக்காய்வாளர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். மேற்படி தொழில் புரிவதற்கான லைசன்ஸ் பெற்றவர்களில் உண்மையாக வருமானமில்லாதவர்கள் யார், பொய்யான தகவல் கொடுத்துப் பொதுநலப்படி பெற்றவர்கள் யார் என்று கண்டுபிடிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. பெருந்தொகையானவர்கள் மோசடியில் ஈடுபட்டிருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகின்றது. பல மில்லியன் டாலர்கள் சம்பந்தப்பட்ட இந்த மோசடியில் சம்பந்தப்பட்ட இவர்கள் தற்போதும் பொதுநலப்படி பெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாமி அப்பாத்துரையின் நூல் வெளியீடு

பிரபல எழுத்தாளரும், பேச்சாளரும், சமூக ஆர்வலருமான திரு சாமி அப்பாத்துரையின் 'Canada A Nation in Motion' என்னும் நூல் வெளியீட்டு விழா டிசம்பர் மாதம் முதலாம் திகதி பிற்பகல் ஆறு மணிக்கு, ஸ்காபரோ 1148 பெலாமி வீதி வடக்கிலுள்ள (Bellamy Road North) விருந்துபசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நூல் அமெரிக்காவின் Author House வெளியீடாக வந்துள்ளது. கனடிய குடிவரவு-குடியகல்வு, மொழி, அரசியல், வரலாறு, சமூக மற்றும் கலாசார விடயங்களை ஆழமாகச் சித்தரிக்கும் இந்த நூல் 396 பக்கங்களைக் கொண்டது.

## தமிழரின் குடிவரவு அனுபவங்களை சி.பி.சி. கேட்கிறது

உங்களின் குடிவரவு அனுபவங்களை கனடிய பிரதான ஊடகமான சி.பி.சி. (Canadian Broadcasting Corporation) வேண்டி நிற்கின்றது. கனடியக் குடிவரவாளர்களில் முக்கிய இடம் பிடித்துள்ள தமிழ்ச் சமூகத்தவர்களுக்கு குடிவரவுத் துறையில் சாதக பாதகமான அனுபவங்கள் இருக்கின்றமையால் அவர்களின் கதைகளை எழுத்து வடிவில் அனுப்பி வைக்குமாறு சி.பி.சி கேட்கின்றது. கனடிய குடிவரவுச் சட்டத்தில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில், குடிவரவாளர்கள் தொடர்பான தொடர் நிகழ்ச்சியொன்றை சி.பி.சி தொலைக்காட்சிச் சேவை தயாரிக்கவுள்ளது. தமிழர்களிடமிருந்து கிடைக்கும் அனுபவக் கதைகளில் சிறந்தவை தெரியப்பட்டு ஒளிபரப்பப்படும். எழுத்தாக்கங்களை community@cbc.ca என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். அல்லது http://www.cbc.ca/news/your community.2012/10.share-your-immigration-stories-with-us.html என்ற இணைய முகவரியில் பகிரலாம்.

## எலும்புகளைப் பாதுகாக்காவிடின் நாற்பது வயதுக்குப் பின்னர் துன்பம்

ஓடியே பழகிவிட்ட நமக்கு உடம்பில் உள்ள எலும்புகள் எதற்காக உள்ளன, அதை ஏன் பாதுகாக்க வேண்டும் என்ற காரணங்களை சிலர் காது கொடுத்து கேட்பதற்கு கூட நேரம் இருக்காது. உடம்பில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. மனிதன் தன் தேவைகளுக்கு ஏற்ற வகையில் அதனை உபயோகப்படுத்தி கொள்ளும் வகையில் கடவுள் நமக்கு அதனை உருவாக்கியுள்ளார். இந்த அனைத்து எலும்புகளும் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு தனது பங்கை செவ்வனே செய்து வருகின்றன.

நாம் இந்த மொத்த எலும்புகளையும் பாதுகாக்க எடுத்து கொள்ளும் உணவு முறைகள் மற்றும் வாழ்க்கை முறை மிக முக்கியமாகும். இந்த மொத்த எலும்புகளும் உடம்பில் உள்ள பகுதிகளுக்கு ஏற்ப தங்களை வடிவமைத்துக் கொண்டு மனிதனுக்கு உடல் கட்டமைப்பை கொடுக்கின்றன.
எலும்பு மற்றும் பற்கள் உடம்பில் உள்ள மிக உறுதியான பகுதிகளாகும். மற்ற உறுப்புகளை பாதுகாப்பதில் எலும்புகள் மிக முக்கிய பணியை செய்து வருகின்றன. அதாவது எடுத்துக்காட்டாக மூளை, இருதயம், சிறுநீரகம், சுவாசப்பை போன்ற பகுதிகள் எலும்புகளின் மூலம் உருவாக்கப்பட்ட கூடுகளில் மிக பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றன.

அதனால் தான் மனிதன் எலும்புகள் மட்டும் சேர்ந்தவற்றை மனித எலும்புக்கூடு என்கிறோம். அதாவது மூளை மண்டை கூட்டிற்குள்ளும், இருதயம், சுவாசப்பை, நெஞ்சு கூட்டிற்குள்ளும் வைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இது போன்ற பாதுகாப்புகளை நமக்கு அளிக்கின்ற எலும்புகள் விபத்துக்களின் போது சில நேரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டு உடைகின்றன. இதனை பெரும்பாலும் குணப்படுத்த நவீன மருத்துவ முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களை எளிதில் சகஜ நிலைக்கு கொண்டு வர முடியும்.


இதனைப் போன்று இன்னும் பல்வேறு நோய்கள் மனித எலும்புகளை பாதிக்கின்றன. அதில் சமீப காலமாக அனைவரையும் பயமுறுத்தி வரும் பாதிப்பு எலும்பு தேய்மானம். இதை ஒரு நோய் என்பதை விட குறைபாடு என்பது மிகவும் பொருந்தும். அதாவது மனிதன் முதுமை அடையும் போது ஏற்படும் உடல் மாற்றங்களில் இந்த எலும்புகளும் சேதம் அடைய தொடங்கிவிடுகின்றன. இதனை நாம் நம் கண்களால் காண முடியாது. மிக மெதுவாக தேயத் தொடங்கும் எலும்புகள், பிற்காலத்தில் ஏற்படுத்தும் நோயின் தீவிரம் ஆளைக் கொடுமைப்படுத்தும் வலிமை உடையது. முதுமையில் பொதுவாக நாற்பது வயதைத் தொடும் பொழுது மனித எலும்புகள் தனது வலுவை இழக்கத் தொடங்கிவிடுகின்றன. இதனை தான் மருத்துவர்கள் எலும்பு தேய்மானம் என்று பொதுவாக விளக்கம் அளிக்கிறார்கள். இது பொதுவாக பெரும்பாலும் பெண்களை அதிகமாக அவதிக்குள்ளாக்கிவிடுகிறது. பெண்களில் 40 வயது முதல் இந்த நோயின் தாக்கம் ஏற்படத் தொடங்கி அவர்கள் வயது அதிகரிக்க அதிகரிக்க நோயின் தீவிரம் அதிகரித்து மிக தீவிரமான பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிறது.

எலும்புகளுக்குத் தேவையான முக்கியமான ஒன்று கல்சியம் என்ற தாது உப்பு. இந்த தாது உப்பை எலும்புகள் நாம் உண்ணும் உணவில் இருந்து எடுத்துக்கொள்ளும் தன்மை கொண்டுள்ளன. இந்தக் குணம் பொதுவாக நாம் முதுமையை நெருங்கும் பொழுது மெதுவாக மாறியும் மறைந்து போய்விடுவதால் எலும்பு தேய்மானம் வருகிறது. அதாவது முக்கியமாக பெண்களில் உதிரப்போக்கு நின்று போகும் காலகட்டங்களில் உடலில் ஏற்படும் ஹோர்மோன் மாறுபாடுகளால் எலும்புகளில் கல்சியம் உப்பை சேகரித்து வைக்கும் பண்புகள் வலுவிழந்து இந்த குறைபாடு ஏற்படுகிறது.

இதனால் ஏற்படும் முக்கிய சில பக்கவிளைவுகள் வருமாறு:
எலும்பு முறிவு, மூட்டு வலி, மூட்டு வாதம், கழுத்து எலும்பு தேய்மானம், முதுகு எலும்பு தேய்மானம், முதுகு வலி, உடல் சோர்வு, அசதி, முதுகு எலும்பு வளைந்து கூன் விழுதல், நடையில் தளர்வு இதுபோன்ற பக்க விளைவுகளால் பெண்கள் தனது 40 வயது முதல் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எல்லா நோய்களையும் நம்மால் குணப்படுத்துவதை விட எளிதாக தடுக்க முடியும் என்பது எல்லோராலும் அறியப்பட்ட உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org